
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

குமுறல் 6
அனல் 1
1990



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மேஜர் சோதியா

இருண்ட பாதையில்

ஒளியேற்றி
முன்னுடிச் சென்றவளே !

பூவையர் என்பது
பூகம்பம் என்றிடும்

கருப்பொருளாய் ஆனவளே !

எழுந்து வா !

எங்கள் ஈர விழிகளை

கொஞ்சம் துடைத்து விட்டுச்செல் !

துடிக்கின்ற எங்கள் நெஞ்சங்களை

கொஞ்சம்

சுகப்படுத்திச் சென்றுறங்கு !

வா ! !

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஆசிரியர் கருத்து

இலங்கை–இந்திய ஆளும் வர்க்கங்களினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தேதியான 29.07.1987 இல் இருந்து இன்று வரைப்பட்ட காலப் பகுதி வரை இந்திய ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான மூர்க்கத் தனமான தேச விடுதலைப் போரை நடாத்தி சின்னஞ்சிறிய தமிழீழ மக்கள் மிகப்பெரிய சாதனையை, மிகப்பெரிய வெற்றியை சாதித்து விட்டார்கள். உலகம் எம் சிறிய தேசத்தைப் பார்த்து வியந்து நிற்கிறது, உலகில் எங்குமே நடைபெறாத அதிசயம் நடந்து விட்டதே என மூக்கின் மேல் விரலை வைக்கிறார்கள். எந்த ஒரு நாட்டினது பொருளாதாரஇராணுவ உதவியின்றி சின்னஞ்சிறிய தமிழீழம் உலகின் நான்காவது பலம் பொருந்திய இந்தியப் படையை எப்படி விரட்டினார்கள்? எமது மண், எமது மக்கள், எமதுவிடுதலை, என்ற அடிப்படையில் ஒன்றாக ஒலித்த விடுதலை ராகம் தான் யுத்தப் பேரிகையாய் முழங்கியது. எதிரியை ஓட ஓட விரட்டியது.

ஒரு வகையில் பார்த்தால்!

கடந்த இரண்டரை கால யுத்தத்தில் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் எமக்கு பாரிய நன்மையை விளைவித்துள்ளார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். தேசவிடுதலையைத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வல்ல உருக்குருதி வாய்ந்த தலைமையை இனம் காட்டியுள்ளனர்.

தியாகிகள் யார்? துரோகிகள் யார்? என்பதை மணல் அளைந்து விளையாடும் எம் மழலைகள்கூட சுட்டு விரல் காட்டி இனம்காட்டும் அளவுக்கு நம்மக்கள் பரிபூரணதெளிவடைந்தது இந்த இரண்டரைவருட காலயுத்தத்தின் போது தான். இந்தியப்படை என்ன உலகின் எந்தப் படையாவும் தமிழீழ மக்களின் உணர்வுகளை சாகடிக்க முடியாது; தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாது! முடிந்தால் உரிய மரியாதையுடன் விடுதலைப் புலிகளை அவர்கள் [illegible] யுத்தம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஆறாயிரத்திற்கும் அதிகமான எம்மக்களைக் கொன்று குவித்ததன் மூலமும் பலநூற்றுக்கணக்காக எமது பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதன் மூலமும் கோடிக்கணக்கான எமது சொத்துக்களை நாசமாக்கியதன் மூலமும் ஆயிரக்கணக்கான மக்களை முடமாக்கியதன் மூலமும் இளைய சந்ததியினரை அனாதைகள் ஆக்கியும், இந்தியப்படை புரிந்த மனித நாகரீகம் வெட்கித் தலைகுனியும் காட்டுமிராண்டித் தனங்கள் மூலம் எமது தமிழீழ மக்களை தெளிவடையச் செய்திருக்கிறது.

இந்திய ஆளும் வர்க்கம் மீது எம் மக்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் யாவும் வெறும் கானல் நீர்என மக்கள்புரிந்துகொண்டனர் இந்திய அரசு தனது நலன் கருதியே எமது விடயத்தில் தலையிட்டது. தனது நலனுக்காக எமது மக்களை, எமது விடுதலையை சிதைத்து சின்னாபின்னப்படுத்த இந்தியா எடுத்த நடவடிக்கைகளே அமைதிப்பணி என பெயர் சூட்டப்பட்டது. என எம்மக்கள் ஐயத்திற்கு இடமின்றி உணர்ந்து கொண்டார்கள். இதன் அடிப்படையில் எமது விடுதலை எமது கையிலே, என்ற கோஷத்துடன் விடுதலைப் புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தேசிய விடுதலையுத்தத்தில் மக்கள் திரள் அணிவகுத்தது. பல ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் பாசறை ஏகினார்கள். ஆயுதம் தரித்தனர். மூர்க்கத்தனமான போரை விடுதலைப் புலிகள் தலைமையில் எம் மக்கள் மேற்கொண்டனர். எதிரிகள் ஓட ஓட விரட்டப்பட்டனர். எதிரிகளின் முகாம்கள் தகர்க்கப்பட்டன. துரோகிகள் அழிக்கப்பட்டனர். ஒரு வீர வரலாற்றின் வெற்றிப் பாதை திறக்கப்பட்டது.

இவை வெறும் கற்பனைச் சோடனைகள் அல்ல. ஒப்பந்தம் உருவாகி இன்று வரைப்பட்ட கால ஓட்டத்தில் கண்முன்னே நிகழ்ந்த சம்பவங்கள். எமது மக்கள் நிகழ்த்திக் காட்டிய சாதனைகள் இவை.

துரோகிகள் இனங்காணப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட நிலையில் எமது வெற்றிக் கோஷம் வான்முட்ட எதிரொலிக்கின்ற இன்றைய நிலையில் இனங்காண முடியாமல் நம்மிடையே உலவி வந்த EROS எனப்படுகின்ற சந்தர்ப்பவாத இரட்டைத் தலை இயக்கம் இன்று விடுதலைப் புலிகளே மக்களின் நாயகர்கள், அவர்களே தேசிய இலட்சியத்தின் சின்னம் என இன்று பகிரங்கமாக அறிக்கைகள் விடுகின்றனர். இதுவரை நடந்தேறிய EROS இன் சந்தர்ப்பவாத நாடகத்தின் உச்சக் கட்டக் காட்சியாகவே இதை நாம் கொள்ள வேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஆரோக்கியமான இன்றைய நிலையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி என்ற கட்சி விரிவாக்கம் பெறுகின்றது. அனைத்து மக்களையும் அணிதிரட்டி தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் நேரடிப் பங்காளர் ஆக்குவதே இதன் நோக்கம். ஆயுதம் தரித்த சிறு குழுவாக விமர்சிக்கப்பட்ட, மக்கள் ஆதரவு அற்ற ஜனநாயக விரோத சக்தியாக எதிரிகளால் கொச்சைப்படுத்தப் படுகின்ற விடுதலைப் புலிகள் அமைப்பில் மக்கள் பலத்தை நிரூபிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் இராணுவ அரசியல் செயல்பாடுகள் தமிழீழ மக்களின் அங்கீகாரம் பெற்றதாக உலகின் கவனத்திற்கு கொண்டுவரும் முயற்சியே இது. தேசவிடுதலையை வெற்றி கொள்வதற்கான பாதையில் அதிசிறந்த அரசியல் நகர்வு என்றே இதனைக் கொள்ள வேண்டும்.

நம் சுதந்திரத்தை மீட்டெடுக்கும் லட்சியப்பேரணியில் உலகம் வாழ் அனைத்துத் தமிழீழ மக்களும் அணி திரள்வது அதி முக்கியமான தேவை—அதி முக்கியமான கடமையும் கூட.

—ஆசிரியர் குழு—

* * * * * * * * * * * *

உங்களுக்கு.....

எரிமலை பற்றிய உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனங்கள், அரசியல்—சமூக நோக்குள்ள ஆய்வுகள், சமூக பிரக்ஞை உள்ள சிறுகதைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கும், திருத்தத்திற்கும் உட்படும்.

—ஆசிரியர் குழு—

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழீழ மக்கள் மீது வரலாறு சுமத்தும் ஒரு சர்வதேச கடமை

ஒடுக்கப்படும் மக்களே வரலாற்றின் சிருஷ்டி கர்த்தாக்கள், ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திர எழுச்சியே வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றும் சக்தியாக விளங்குகிறது.

ஒடுக்குமுறை எங்கு தோற்றம் கொள்கிறதோ அங்கெல்லாம் அதற்கு எதிர்ப்பும் எழுகின்றது. ஒடுக்குமுறை தீவிரமாக, எதிர்ப்புமுறையும் தீவிரமாகின்றது.

ஒடுக்குமுறை பல வடிவங்களில் தோற்றங்கொள்கிறது. வர்க்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை, காலனித்துவ ஒடுக்குமுறை, நவகாலனித்துவ ஒடுக்குமுறை இப்படியாக எதிர்ப்புமுறையும் பல வடிவங்களில் தோற்றங்கொள்கிறது. சாத்வீகப் போராட்டமாக, தொழிலாளர் கிளர்ச்சியாக, மக்கள் கிளர்ச்சியாக, மக்கள் புரட்சியாக, ஆயுதப்போராட்டமாக பல வடிவங்களில் எதிர்ப்புமுறை வெளிப்பாடு காண்கிறது. இப்போராட்ட முறைகளில் ஆயுதப்போராட்டமே அதி உயர்ந்த அரசியல் போராட்ட வடிவமாகும்.

ஒடுக்குமுறைகளின் தன்மைகளைப் பொறுத்தே எதிர்ப்பு முறைப் போராட்ட வடிவங்கள் அமைகின்றன. ஒடுக்குமுறை தாங்கொணா நிலையை அடையும் போது எதிர்ப்புமுறை ஆயுதப்போராட்டமாக பரிணமம் கொள்கிறது. ஆகவே ஆயுதப் போராட்ட வடிவம் அதி உன்னத அரசியல் போராட்டமுறையாகக் கருதப்படுகிறது.

ஒடுக்கப்படும் மக்களுக்கும், ஒடுக்குமுறையாளர்களுக்கும் மத்தியில் எழும் முரண்பாடு புரட்சியாக வெடிக்கிறது. மக்கள் கிளர்ச்சி வெடிக்கிறது. ஒடுக்கப்படும் மக்கள் இறுதியில் சுதந்திரம் பெறும்போது இந்த முரன்பாடு தீர்வு காண்கிறது. முரண்பாடுகள் தெளிவின்றி, கூர்மை பெற்று, சுதந்திரமாகத் தீர்வு பெற்று உலக வரலாற்றின் ஓட்டம் அசைந்துசெல்கிறது.

உலக வரலாற்றில் எத்தனையோ இனங்கள் நாடுகள் சுதந்திரத்தைத் தழுவியுள்ளன. எத்தனையோ இனங்கள் எத்தனையோ நாடுகள் சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றன. உலக அரங்கில் பல மனைகளில் வீரசுதந்திரம் வேண்டி ஆயுதப்புரட்சி [illegible]

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகளும் விடுதலைக் கிளர்ச்சிகளும் உலகின் பல முனைகளில் தோற்றங் கொண்டபோது ஒட்டுமொத்தத்தில் அவை ஒன்றுடன் ஒன்று இணைந்ததாக, மனிதகுலத்தின் விடுதலை வரலாற்றை நிர்ணயிப்பதாக அமைகின்றன. ஆகவே ஒவ்வொரு போராட்டமும் உலகப் புரட்சிக்கும், ஒடுக்கப்படும் உலக மக்களின் விடுதலைக்கும் வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன.

எனினும் புரட்சிப் போராட்டங்களில் ஒரு சில மட்டும் சர்வதேச பரிணாமத்தை அடைந்து மனிதகுல வரலாற்றுப் பாதையை நிர்ணயிக்கும் முக்கியத்துவத்தைப் பெற்று விடுகின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

உள்ளீட்டாக எழும் வர்க்க முரண்பாடு, ஒடுக்குமுறை, ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆதிக்கம், பிராந்திய வல்லரசுகளின் தலையீடு, அதிலுடன் அந்தந்த நாடுகளின் பூகோள அமைப்புகேந்திர முக்கியத்துவம், அரிய வளங்கள், அந்தந்த போராட்டங்களின் தனிச்சிறப்பான தன்மைகள், உன்னத தியாகங்கள், வீரம் செறிந்த அர்ப்பணிப்புகள் ஆகியவற்றைக் காரணங்களாகக் கொள்ளலாம்.

* மன்னர் ஆட்சிக்கும், பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கும் எதிராக வெடித்த பிரஞ்சுப் புரட்சி,

* உலகின் முதலாவது சோசலிச சமூக மாற்றத்தைக் கொண்டு வந்த ரஷ்யப் பாட்டாளிவர்க்கப் புரட்சி,

* ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டமாகவும் சோசலிசப் பாதை தழுவிய கிளர்ச்சியாகவும் உருவம் கொண்ட சீன மக்களின் புரட்சி,

* பிரஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்திய அடக்குமுறைகளை உடைத்தெறிந்த வியட்நாமிய மக்களின் வீரம் செறிந்த விடுதலைப்போர்,

* அமெரிக்க ஏகாதிபத்திய சுரண்டல்முறைக்கு முண்டு கொடுத்து நின்ற பட்டிஸ்ரா சர்வாதிகாரத்தை மண்கவ்வச் செய்த கியூபா மக்களின் புரட்சிகர ஆயுதப்போராட்டம்,

* தனது சொந்த பூகோள நலனுக்காக அயல் நாட்டு மக்களை அடிமை கொள்ள முனைந்த சோவியத் யூனியனுக்கு சாட்டையடி கொடுத்த ஆப்கானிஸ்தானின் விடுதலைப்போராட்டம்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இந்தப்புரட்சிகர யுத்தங்கள் மனிதகுல விடுதலை வரலாற்றுப்பாதையில் பெரும் திருப்பு முனைகளாக அமைந்ததோடு, உலக சமூக அமைப்பிலும் புரட்சிகரமான மாற்றத்திற்கு வழிகோலின. உலக ஏகாதிபத்தியத்திற்கும், பிராந்திய வல்லாதிக்கத்திற்கும் சவாலாக அமைந்து, சர்வதேச பரிமாணம் பெற்ற இப் புரட்சிகர விடுதலைப் போராட்டங்கள் உலகின் ஒடுக்கப்படும் மக்களுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கின்றன.

எமது போராட்டமும் இன ஒடுக்குமுறையால் எழுந்த அரசியல் தேசிய சுயநிர்ணயப் போராட்டமாக உருவகம் பெற்றிருந்தபோதும், இந்திய பிராந்திய வல்லாதிக்கத்தின் தலையீடு காரணமாக சர்வதேச பரிமாணத்தை பெற்றிருக்கிறது. பிராந்திய, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான விடுதலைப் போராட்டமாக விரிவாக்கமும், முக்கியத்துவமும் பெற்றிருக்கும் எமது விடுதலைப் போராட்டம் இன்றும் உலக மக்களுக்கு ஒரு உன்னத வழிகாட்டியாக அமைகிறது. பிராந்திய வல்லாதிக்கம் காரணமாகத் திணறிக்கொண்டிருக்கும் கோடானுகோடி மக்களுக்கு எமது வீரம் செறிந்த போர் ஒரு புதிய நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் கொடுத்திருக்கிறது.

இந்திய ஏகாதிபத்தியம் எமது போராட்டத்தை நசுக்கிவிட பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறது. தென்னாசிய உலகத்தை தனது வல்லாதிக்கப் பிடிக்குள் வைத்திருக்க முனைந்த இந்தியப் பேரரசிற்கு ஒரு சிறிய விடுதலை இயக்கம் ஒரு பெரிய சவாலாக எழுந்திருப்பது அவமானத்தையும், ஆத்திரத்தையும் மூட்டியிருக்கின்றது. எமது போராட்டம் வெற்றி பெறுமாயின் தனது அரசியல் பூகோள அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என இந்திய அரசு அச்சம் கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் வீர சுதந்திரப் போர் வெற்றி கண்டால் அதன் விளைவுகள் தென்னாசியக் கண்டத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். இந்திய வல்லாதிக்கத்திற்குப் பயந்து ஒதுங்கியுள்ள தென்னாசிய நாடுகள் இந்தியாவை எதிர்த்து நின்று சுயாதீனமாகச் செயற்படும் துணிவும், நம்பிக்கையும் பெற்றுவிடக்கூடும். இந்தியாவில் காலங்காலமாக நசுக்கப்படும், ஒடுக்கப்படும் பல்வேறு தேசிய இனங்கள் விழிப்புற்று எழுச்சி பெற்று தேசிய சுயநிர்ணயப்போர் தொடுக்கத் துணிந்துவிடலாம். தமிழீழ சுதந்திரப் புரட்சித் தீ பாரத கண்டத்தில் பரவி முதலாளித்துவ ஆட்சியமைப்பை ஆட்டங்காண வைக்கலாம். இறுதியில் தனது பிராந்திய வல்லரசு ஸ்தானத்திற்குப் பங்கம் ஏற்படலாம். இப்படியான அச்சங்கள் [illegible] எமது போராட்டத்தை நசுக்கிவிட [illegible]

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இந்திய அரசு எந்த வித தந்திரோபாயங்களைக் கையாண்டு எம்மை நசுக்கமுற்பட்டாலும், நாம் உறுதி தளராது போராடுவோம். இறுதியில் வெற்றி நமதே என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையுண்டு. சத்தியமும் தர்மமும் எமது பக்கம் இருக்கும்வரை, வரலாற்றின் ஆன்மா எம்மை வழிநடத்தும்வரை, மலைபோல் மக்கள் ஆதரவு எமக்கு இருக்கும்வரை எமது போராட்டத்தை எந்தச் சக்தியாலும் அழித்துவிடமுடியாது.

ஒடுக்கப்படும் மக்களே வரலாற்றைப்படைக்கிறார்கள். இந்த வரலாற்றைப் படைத்து உலக சரித்திரத்தின் ஓட்டத்தில் ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தும் மகத்தான கடமை எமது மக்கள் மீதும் எமது மக்களின் சுதந்திர எழுச்சியின் வடிவமான எமது இயக்கத்தின் மீதும் சுமத்தப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழினம் சிந்திய இரத்தத்திலிருந்து உலக வரலாற்றுச் சக்தி புனர்ஜென்மம் பெற்று புதிய உலகம் படைக்கும். உலகின் ஒடுக்கப்படும் மக்களுக்கும், நசுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் எமது போராட்டம் புதிய விழிப்புணர்வு கொடுக்கும். ஒளிமயமான எதிர் காலத்திற்கு வழிகாட்டியாக அமையும்.

**(நன்றி-உணர்வு)**

* * * * * * * * * * * * * * *


**தொலைபேசி செய்தித் தொகுப்பு**

*ஈழத்துப் போர்க்களத்தில் - இந்திய-சிறீலங்கா அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் பற்றிய தினசரி செய்திகள் மற்றும் குறிப்புகளைக் கொண்ட தினசரி செய்திச் சேவை,*

*இல. 46364949*


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வேலியில் பச்சோந்தி ஒன்று அந்த நிறம் காட்டுமா? இந்த நிறம் காட்டுமா?

சொல்ல முடியாது.

பச்சை மரத்தில் உட்கார்ந்தால் பச்சை மரத்தோடு சேர்ந்து பச்சோந்திக்கு பச்சை நிறம் பாறைக் கல்லில் உட்கார்ந்தால் பாறையோடுசேர்ந்து பச்சோந்திக்குப் பாறை நிறம்.

"ஈரோஸ்"காரனும் இப்படித்தான்.

பிரபாகரனுக்குப் பக்கத்தில் நிற்கும் போது இவன் பிரபாகரனின் நிறம்.

இந்திய "ரோ"வோடு நிற்கும் போது இவன் இந்திய ரோ நிறம்.

நேற்றொன்று இன்றொன்றாய் வாழ்பவர்களில் நாம் சந்தித்த சந்தர்ப்ப வாதக் கும்பல்கள் நூற்றொரு நூற்றொன்றாய் ஈரோசும்.

---

# பச்சோந்திகள்

---

ஒரு காலத்தில்–தமிழீழத்தில் 'ஓரளவு அமைதி' இருந்த நாட்களில் 'நாங்கள் போராடுவோம்' என்று இவர்கள் ஆர்ப்பரித்து எழுந்தார்கள். இன்று 'பெரிய போர்' நம்மண்ணில் நடந்து கொண்டிருக்கும்வேளையில் ஓரளவு அமைதியாக இருப்போம் என்று முணுமுணுக்கிறார்கள்.

வசதியான பாதுகாப்பான இடம் பார்த்துப் பதுங்கி வாழும் கோழைகள்.

ஒருமுறை ஈராசின் மத்திய குழு உறுப்பினர் சங்கர் ராஜி செய்தி ஏட்டுக்கு ஒரு அறிக்கை கொடுத்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



"விடுதலைப் புலிகள் கழுத்தில் சயனைட்டைக் கட்டிக் கொண்டு உலாவும் கோழைகள். விடுதலை வீரர்கள் நஞ்சு சாப்பிட்டு மடிவது கோழைத்தனம்.

அடடா...! ஈரோஸ் காரர்கள் எத்தனை பெரிய வீரர்கள்.

அடுத்தவன் தங்களை அளிக்கும் போதுஐயோ எங்களைக் கொல்கிறானே....நாங்கள் நிராயுத பாணிகள்! என்று அழுது வடிக்கும் இவர்கள் வீரமே வீரம்.

இதோ உதயன் (14-03-89)ஏட்டில்வெளி வந்த ஈரோஸ் அறிக்கை:-

எமது பொதுக்குழு உறுப்பினரான தோழர் சில்வாவும் முன்னணித் தோழர் அஜீத்தும் கடந்த10ம் திகதி மன்னார் மடுரோட் பகுதியில் வைத்துக்கடத்தப் பட்டு 12 ம் திகதியன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

நிராயுத பாணிகளாகச் செயற்படும் எமது தோழர்களை எந்தக் காரணமும் இன்றிச் சுட்டுக் கொலை செய்த ஈனத்தனமானசெயலைக்கண்டிக்கிறோம்

எப்படி?

தோழர்கள் கொலைக்கும்பல்களால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இவர்கள் துப்பாக்கியைவைத்து கொண்டு நிராயுதபாணிகள் என்று ஒப்பாரி வைக் கிறார்கள்.

வெட்கமாக இல்லை?

60 இற்கும் மேற்பட்ட ஈரோஸ்உறுப்பினர்கள் இதுவரை இந்தியப் படையாலும் அவர்களின் கைக் கூலிகளாலும் சுட்டு வெட்டி அழிக்கப்பட்டார்களே - நீங்களே ஒப்புக் கொண்டீர்களே-என்ன செய்தீர்கள்? உங்கள் ஆயுதங்களை அடைகாத்துக் கிடந்தீர்கள்.

6000 க்கு மேற்பட்ட தமிழ் பேசும்மக்களை இந்திய வெறிப் படை சுட்டுக் கொன்று தமிழ்பெண் களை கற்பழித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஏழைத் தமிழ் உழவர்களின் கூடுகளும் வீடுகளும் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட நேரத்தில் இந்தியப்படையோடு மறைவாக ஒட்டி உறவாடினீர்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இதோ இந்தியப் படையின் கொடுமைகளைப் பற்றி ஈரோசின் ஓர் அறிக்கை, முல்லைத்தீவை நெருப்பூட்டியும் குண்டு வீசியும் இந்திய வெறிப்படைகள் அழித்த போது ஈரோஸ் விட்ட அறிக்கை இது :–

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவத் தாக்குதல்களை விட முல்லைத்தீவில் கடுமையானதாக்குதல்கள் நடைபெறுகின்றன.

இதே வேளை வன்னிப்பகுதியில் மீண்டும் தாக்குதல்ஒன்றை ஆரம்பிப்பதற்கு இந்தியப் படையினர்தயாராகி வருவதாக எமக்குத் தகவல்கள்கிடைத்துள்ளன.

மக்கள் அச்சம் கலந்த வாழ்க்கையை வாழும் நிலை உருவாகியுள்ளது.

(உதயன்–25–03–89)

இப்படிச் சொன்ன ஈரோஸ் இன்னொரு செய்தி ஏட்டில் என்ன சொன்னது தெரியுமா?

"இந்திய அமைதிப்படையின் வருகையின் பின்னர் வடக்கு–கிழக்கு பகுதிகளில் நிச்சயமான பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

–சங்கர் ராஜீ.
வீரகேசரி.
09–03–89.

இன்னொரு அதிர்ச்சி தரும் புதிய செய்தி இப்போது கிடைத்திருக்கின்றது. இந்தியப் படையிடம் "றோ" அதிகாரிகளிடம் –ஈரோஸ் ஆயுதமும் பயிற்சியும் பெறுகிறதாம்.

21.11.89 இல் ஈரோஸ் முகாம் ஒன்றில் இருந்து புலிகளிடம் சரணடைந்த ஈரோஸ் உறுப்பினர்கள் தெரிவித்த தகவல் இது.

தமிழரை இந்தியப்படை கொன்று பிணமாகப் போட்டுக்கொண்டிருக்கும் போதே–இந்தியப் படையிடம் ஆயுதம் வாங்கி அந்தத் தடியர்கள் முன் தொண்டனிட்டுக் கும்பிடுகிறது ஈரோஸ்.

இந்தியப்படை விடுதலைப் புலிகளுக்குஎதிராக போர் தொடுத்த போது–இந்தியப் படை வெறியர்கள் ஈரோசினர் ஆயுதங்களையும் தான் அள்ளிக் கொண்டு போனார்கள். இன்று அதே இந்தியப் படை தமிழர்களை அழித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஈரோஸ் காரர்கள் இந்தியப் படையிடம் ஆயுதங்களை வாங்கிப் புதைத்து வைக்கிறார்கள்.

www.tamileelamarchive.com

ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்பு...புதைபொருள் ஆய்வாளர் கையில் இந்த ஆயுதங்கள் சிக்கினாலும் சிக்கலாம்.

பாராளுமன்றத் தேர்தலில் வடமாகாணத்திலும் பிற இடங்களிலும் போட்டியிட்ட போது " நாங்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவோடு தான் தேர்தலில் நிற்கிறோம்..என்று கூறி மக்களிடம் வாக்குக் கேட்டது ஈரோஸ். ஆனால் தேர்தலில் வென்றபின் என்னசொன்னார்கள் தெரியுமா?

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை மக்களின் ஏகபோக பிரதிநிதிகளாக நாம் ஏற்றுக் கொள்ளவில்லை!!

—சங்கர் ராஜீ
ஈரோஸ்

உதயன் 08-03-89

வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகமாகும். இந்த மண்ணின் ஒவ்வொரு அங்குலமும் தமிழர்களுடையதே...ஆனால் ஈரோசின்தலைவர்களில் ஒருவரான சங்கர் ராஜி வீரகேசரி 09-03-89 இதழில் என்ன சொல்கிறார்?

"வடக்கு-கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் அவர்களுக்குரிய உரிமைகளுக்குரியவர்கள். நாம் இனரீதியான வேறுபாடுகளைக் காட்டவில்லை.

எப்படி சங்கதி?

8000சதுர மைல் தமிழீழத்தில்..3000 சதுர மைல்கள் சிங்களக் குடியேற்றத்தால் பறி போய் இருக்கிறது.

நிகழ்ந்து முடிந்த இந்த நிலப்பறிப்பை ஒப்புக் கொள்வது போல் இந்த அறிக்கை அமையவில்லையா?

லண்டன் தெருக்களில் ஈரோஸ் தலைவர் இரத்தின சபாபதி-அமிர்தலிங்கத்தைத் "துரோகி" என்று திட்டித் திரிந்த காலம் தொடக்கம்- சங்கர் ராஜீ அமிர்தலிங்கத்தை "முதலாளித்துவவாதி" என்று தூற்றித் திரிந்த காலம் வரை-அமிர்தலிங்கத்தை இவன் சாக மாட்டானா? என்று கூடத் தூற்றியவர்கள் அமிர்தலிங்கம் கொல்லப் பட்டபோது-

அமிர்தலிங்கம் ஐயோ! போனையா? என்று ஒப்பாரி அழுதார்கள்—

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஈரோஸ் எம்.பி.எஸ்.சிவமகாராஜா 22-09-89 இல் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கத்தைத் தூக்கி வைத்து "ஓ" என்று கத்திறைராம்....... கதறிறைராம்.....

ஈரோஸ்காரர்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்வதானால்-ஈ பி ஆர் எல் எவ்-ரெலோ-ஈ என் டி எல் எவ் போல் நீங்கள் சதாரண மக்களை இன்னும் கொல்லவில்லை.அது ஒன்றுதான்பாக்கி.

(நன்றி-நெருப்பு)

(நெருப்பு-களத்திலிருந்து வெளிவரும் ஏடு)

*****************************

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

# நூல் நிலையம்

**அரசியல், சங்க, சமுதாய, கலை, கலாச்சார இலக்கிய துறைகள் சார்ந்த 1700 க்கும் மேற்பட்ட நூல்களுடன் கூடிய நூல்நிலையமும், தமிழீழ, தமிழக தினசரிகளுடன் கூடிய வாசிகசாலையும் வெள்ளி தவிர்ந்த மற்றய நாட்களில் மாலை 2மணியில் இருந்து இரவு 8மணிவரை திறந்திருக்கும்.**

**341,RUE DES PYRENEES,**

**75020 PARIS.**

**TEL:43 58 11 42**

**M°:JOURDAIN**

**BUS:26 (L'ERMITAGE)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முள்ளில்லாத ரோஜாக்கள்

பூ ரோஸ்

எந்தச் சட்டியிலும் வளரும்

எந்தத் தலையில் வைத்தாலும் சிரிக்கும்

தோட்டத்தில் காற்றடித்தால்

எந்தப் பக்கமும் வளைந்து கிடக்கும்

ஈரோஸ்

எந்தக் கட்சியோடும் ஒட்டும்

எந்த இடத்துக்கும் ஒத்துப்போகும்

நாட்டில் சிக்கல் வந்தால்

எந்தப் பக்கமும் வளைந்து கொடுக்கும்

ஈரோஸ்

நீ ஒரு

பூரோஸ்

ஒரே ஒரு வேறுபாடு

ரோசாச் செடியில்

பிறர் தொட்டால் குத்தும் முள் - ஆனால்

மானங் கெட்ட ஈரோசின்

கைகளில் கூட ஏக துப்பாக்கிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# "கம்யூனிசம்" மாற்றங்கள்

ஐரோப்பாவில் பெரும் மாற்றங்கள் மிக வேகமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மேற்கு ஐரோப்பாவில், ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த 12 நாடுகள் அரசியல், பொருளாதார ரீதியில் ஒன்றிணைவதை நோக்கி வேக நடை பயில்கின்றன. அதற்கு முதற்படியாக எல்லா நாடுகளுக்கும் பொதுவான நிதி அமைப்பு முறையினை 1992ம் ஆண்டளவில் ஏற்படுத்த முனைகின்றன. தொழிலாளிகள், இளைப்பாறிகள் ஆகியோரது நலன்களைப் பேணும் சமூக சாசனம் (Social Charter) ஒன்றையும் பிரகடனப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. பொதுநிதி அமைப்பு முறை, சமூக சாசனம் ஆகியவற்றிற்கு முட்டுக்கட்டையாக நிற்பது மார்கரட் தட்சரின் பிரித்தானிய அரசாகும். ஏனைய 11 நாடுகளும் ஒற்றுமைப்பட்டு ஆதரிப்பதால், ஐரோப்பிய சமூகத்தில் பிரிட்டன் தனிமைப்பட்டு நிற்கிறது. திட்டங்கள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு போனால், விரைவில் மேற்கு ஐரோப்பாவில் 12 நாடுகளையும் ஒன்றிணைத்த கூட்டாட்சி முறை ஒன்று தோன்றுவதைக் காணலாம்.

ஐக்கிய ஐரோப்பிய நாடுகள் என்ற (United States of Europe) பெயரில், ஒரு பெரும் ஐரோப்பிய நாடு உருவாகும் சாத்தியக் கூறு உண்டு.

கிழக்கு ஐரோப்பாவிலும் சித்தாந்த, அரசியல் மாற்றங்கள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. போலந்து, கங்கேரி, செக்கோஸ்லவாக்கியா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் கொம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கட்சி ஆட்சிமுறை தகர்ந்து வருகின்றது. பல கட்சி ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. போலந்தில் சொலிடாரிட்டி என்ற எதிர்க்கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளது. மற்ற நாடுகளில் கொம்யூனிஸ்ட் கட்சியின் தனிச் செல்வாக்கு குறைக்கப்பட்டு வருகிறது. கொம்யூனிஸ்ட் கட்சியின் ஏக நிலை இல்லாது போவதுடன் சோசலிச பொருளாதார நிலையிலும் மாற்றம் ஏற்படுகிறது. முதலாளித்துவ பொருளாதார அம்சங்களையும் கலக்கும் நிலை காணப்படுகின்றது. தனியார் சொத்துடைமையும்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தனியார் முயற்சியும் ஊக்குவிக்கப்படும் நிலை தோன்றுகிறது. மேற்கு ஐரோப்பிய ஆட்சி முறை, பொருளாதார முறை ஆகியவற்றில் சிலவற்றைப் பெற்று கலப்பு முறை ஒன்று பரிசீலனைக்குட்படுத்தப்படுகிறது. அதாவது ஜனநாயகசோசலிசம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. ஜனநாயக உரிமைகளையும், சமுதாய சமத்துவத்தையும் கொண்டதாக இருக்க வேண்டுமென ருஷ்யாவின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மக்கள் மாற்றங்களை செய்து வருகிறார்கள். இத்தகு மாற்றங்கள்—சோசலிச கட்டுமானத்தில் நடைபெறும் சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ருஷ்யாவின் இச் சீர்திருத்தங்களையே பெரஸ்ரொய்க்கா, கிளாஸ்நொஸ்ற் என்று அழைப்பர்.

பெரஸ்ரொய்க்கா என்பது பொருளாதார மறுசீரமைப்பு கிளாஸ்நொஸ்ற் என்பது திறந்தமுறை—என்ற அளவில் இப்போதைக்கு விளங்கிக் கொள்வோம். இவற்றை திரிபு வாதம் என்று வர்ணிப்போரும் உண்டு. மாக்சிச அடிப்படையில் அமைக்கப்படும் சோசலிச கட்டுமானத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு பிறழும் நிலை என்று கடும் விமர்சனம் ஒன்றும் முன்வைக்கப்படுகிறது. கிழக்கு ஐரோப்பாவில் இவ்வாறு மாற்றங்கள் இடம் பெறுகையில், மேற்குஐரோப்பாவிலும் சோசலிசக் கருத்துக்கள் மக்கள் மத்தியிலும், அரசாங்க மட்டங்களிலும் பரவி, வேகமாக வளர்ந்து உறுதி பெறுவதையும் மறுத்தல் முடியாது. சோசலிச கிழக்கு ஜேர்மனியையும், முதலாளித்துவ மேற்கு ஜேர்மனியையும் இதுவரை பிரித்து வந்த பேர்லின் சுவர் தகர்ந்து விட்டது. எவ்வித தடையுமின்றி மக்கள் இரு பகுதிக்கும் போய் வரும் நிலை தோன்றி உள்ளது. கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளை கூட்டாட்சி முறையின் கீழ் இணைக்கும் கருத்து வளர்ந்து வருகின்றது. ஐரோப்பிய நாடுகள் அனைத்தினதும் ஒன்றிணைவோடு சம்பந்தப்பட்டதாகவே கிழக்கு, மேற்கு ஜேர்மன்களின் ஒன்றிணைவும் இருக்குமெனச் சொல்லப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளின் ஒன்றிணைவு என்றால் என்ன? மேற்கு ஐரோப்பிய சமூகத்தினுள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அங்கத்துவ நாடுகளாவதும், ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு கூட்டாட்சி அமைப்பினுள்வருவதுமே ஐரோப்பிய நாடுகளின் ஒன்றிணைவாகும். இப்போது ஐரோப்பாவில் நடைபெறும் மாற்றங்கள் இச் சாத்தியக்கூற்றினை நிரூபிப்பதாக உள்ளன. இரு வல்லரசுகளான ருஷ்யாவுக்கும், ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில், 2ம் உலகப்போருக்குப் பின்னர் நிலவிய நெருக்கடி நிலைமை (Cold War ) தளர்ந்து வருவது மட்டுமல்ல, இல்லாது மறைகிறது என்றும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நேட்டோ, வோர்ஸோ இராணுவக் கூட்டுக்களையும் படிப் படியாகக் கலைக்க வேண்டிய நிலை தோன்றிவருகிறது. இரு வல்லரசுக்களுக்குமிடையில் நல்லுறவு வளரும் சாத்தியக் கூறுகளும் ஏற்பட்டுள்ளது. அண்மையில் மோல்றாவில்(Malta)இரு நாட்டுத் தலைவர்களுக்கிடையில் இடம் பெற்ற உச்சி மகா நாடு இப்போக்கையே பிரதிபலிப்பதாக உள்ளது. ஐரோப் பிய நாடுகள் முழுவதையும் ஒன்றிணைத்து 21ம்நூற்றாண்டினுள் கொண்டு செல்லும் சிற்பியாக தான் விளங்கவேண்டும் என்று ருஷ்ய ஜனாதிபதி கோபச்சேவ் விரும்புகிறார்.

அவர் இதனையே பொது ஐரோப்பிய வீடு (European House) என்று கூறி வருகின்றார். இத்தகைய கருத் துக்கு ஐக்கிய அமெரிக்காவும், அதன் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் ஆதரவளிக்கின்றார். ஜோர்ஜ்புஷ் ஐரோப்பியசமூக நாடுகளின் பொருளாதார, அரசியல் ஒன்றிணைவுக்கு முழு ஆதரவையும் அளிக்கிறார். டிசம்பர் 4ம் திகதி பெல்ஜிய த்தின் தலைநகர் புருசல்ஸ்ஸில் இடம் பெற்ற நேட்டோ நாட்டுத் தலைவர்களின் உச்சி மகாநாட்டில் புஷ் பேசும் போது "ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த 12நாடுகளும் உலகில் வகிக்கும் பாத்திரத்தை பாராட்டுகின்றேன். 12 நாடுகளும் ஒன்றிணைவதற்கான வேகமான, தொடர்ச்சியா ன செயற்பாடுகளை எதிர்பார்க்கின்றேன். கிழக்கு ஐரோப் பாவில் உள்ள சீர்திருத்தச் சக்திகளைக் கவரும்காந்தமாக மேற்கு ஐரோப்பா விளங்க வேண்டும். ஒன்றிணைந்த ஐரோ ப்பாவை அமெரிக்கா விரும்புகின்றது" என்றார். கிழக்கு மேற்கு ஐரோப்பா ஒன்றிணைவதை அமெரிக்காவிரும்புகிறது என்பது தெரிவாகின்றது. ஐரோப்பா முழுவதும் முதலாளித்து வ அமைப்பு முறை தோன்ற வேண்டும் என்ற விருப்பும் அங்கு தொக்கி நிற்கிறது. அடுத்த வருடம் வியன்னாவில் மரபு ரீதியான ஆயுதப் பரிகரண மாநாட்டுக்கு ஐரோப்பாவின் 35நாடுகள் அழைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பின்லாந்தின் தலை நகரான கெல்சிங்கியில் நடைபெற்ற 35ஐரோப்பிய நாடுகளின் மகாநாட்டைப்போல இதுவும் 2ம் கெல்சிங்கியாக ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைக்கும் களமாக அமையும். ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைவது வர லாற்றுப் போக்கெனக் கொண்டால் எந்தத் தத்துவார்த்த அடிப்படையில் ஒன்றிணையப் போகின்றன? அமெரிக்கா போன்ற நாடுகள் முதலாளித்துவத்தின் பரவலை நோக்கிச் செயல்படுகின்றன. கோபச்சேவோ சோசலிச சீர்திருத்தங் கள் – கொம்யூனிச சமுதாயத்தை அமைக்கும் நோக்குடைய வை என்று கூறி வருகிறார். இப்பயத்தை முதலாளித்துவ பிரிட் டனின் தட்சர் அம்மையாரும் அடிக்கடி கூறி வருகிறார். சோசலிச ஐரோப்பாவாக முழுவதும் மாறிவிடக்கூடாது என்பதற்காகவே ஐரோப்பாவின் ஒன்றிணைவை [illegible] எதி ர்க்க வருகின்றார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இப்போது ஐரோப்பாவில் நடைபெறும் மாற்றங்களை என்னவென்று கூறலாம்? மாக்ஸின் இயங்கியல் தத்துவத்தின் பிரகாரம் இதனை முரண்பாடுகளின் விதி என்று கூறலாமா? மனித இனம் விடுதலை பெற்றுச் செல்லும் வரலாற்றின்போக்கில் முரண்பாடுகளின் மோதல் என்று இதனை கூறலாமா? அவ்வாறு நாம் கருதினால்—உலகம் சோசலிச விடுதலையை நோக்கித்தான் முன்னேறுகிறது என்று நம்பலாம்.

இத்தகைய சாதகமான கருத்துவத்தை நாம் நம்பிக் கொண்டு செயல்பட்டாலும், ஏழைநாடுகளின், மக்களின் நிலைமை என்ன? ஐரோப்பிய நாடுகள் சோசலிச சமூக மாற்றத்திற்குத்தான் உட்படுகிறது என்று எடுத்துக்கொண்டாலும்—உலக முதலாளித்துவம் நெருக்கடி நிலையில் உள்ளது என்று கருதினாலும், உலக ஏகாதிபத்தியம் தகர்ந்து வருகிறது என்று நம்பினாலும் ஏழை நாடுகளின் மக்களும், தொழிலாள வர்க்கமும் இணைந்து தொடர்ச்சியான போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதையே இப்போதைய போக்குகள் தெளிவாக எமக்கு உணர்த்துகின்றன. ருஷ்ய, அமெரிக்க நட்புறவுடன் மூன்று உலகங்கள் இரண்டாகச் சுருங்குகின்றன.

உலக முதலாளித்துவம்—ஏகாதிபத்தியச் சுரண்டலை ஏழை நாடுகளில் நடத்திக் கொண்டேயிருக்கப் போகிறது. ஐரோப்பிய நாடுகளின் இணைவு—உலக முதலாளித்துவ நெருக்கடியையே காட்டுகிறது. எனவே — இணைந்து— சுரண்டும் நிலையும், ஆயுத விற்பனையும் தொடர்ந்து நடைபெறவே போகிறது. நெருக்கடியைக் குறைக்க உலகமுதலாளித்துவம் அவ்வாறே செயல்ப்படும். அத்தகைய நிலையில்— முன்னேற்றம் அடைந்த நாடுகளில்— தொழிலாள வர்க்கங்கள் —ஏகாதிபத்தியச் சுரண்டலின் காரணமாக பின் தங்கிய நாடுகளிலுள்ள தொழிலாளரிலும் மேன்மையான நிலையில் இருப்பார்கள். மிகக் குறைந்த வீதத்தினரே பின் தங்கியநாட்டு மக்களுக்குக் கை கொடுக்கப் போகின்றார்கள். எனவே பின் தங்கிய நாட்டு மக்கள்—தாங்களே கடுமையான போராட்டத்தின் மூலம் உலக முதலாளித்துவ சுரண்டலில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது. நீண்ட காலக் கண்ணோட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிணைவு —ஐரோப்பாவில் சோசலிச மாற்றத்தை கொண்டு வருவதற்கான அறிகுறியாக இருந்த போதிலும் பின் தங்கிய நாடுகளின் மக்கள் நீண்ட கடுமையான போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

—மதி—

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இஸ்ரேலிய துப்பாக்கிகள்

—உண்மைச் சம்பவம்—

மத்தியானம் பன்னிரண்டு மணி. சூரியனின் உக்கிரத்தின் வேகம் தாளாத முகத்தில் வியர்வைத் திட்டுக்கள் பூத்து பின் வழிய அரக்க பரக்க வருகிறார்கள் துஸ்யந்தியும், பாபுவும்.

"என்ன இது சரியான.....வெய்யிலாக்கிடக்கு"

சுடு மணலில் அதலைக் காலெடுத்துஅவளுடன் இணைந்து நடக்கிறான் பாபு.

"இனி! தார் ரோட்டில் ஏறினால் கால் சுடுகிறது கொஞ்சம் குறைவாய் இருக்கும்." அவசரமாக ஆறுதல் கூறினாள் துஸ்யந்தி.

மணல் செறிந்த குச்சொழுங்கையிலிருந்து தார்வீதியில் ஏறி இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

அது தென்மாராட்சி மண்ணின் நகர்ப் புறப்பகுதி. அந்நியனின் நடவடிக்கைகள் அங்கு அடிக்கடி துப்பாக்கி ரவைகளாக உமிழப் படுவதால் அந்தப் பெரிய வீதி வெறிச்சோடிக் கிடந்தது.

செருப்புகளின் சத்தம் துல்லியமாக கேட்கும்அளவிற்கு அந்த வீதி ஓர் அநியாயமான அந்தகாரத்தினுள் மூள்கிப் போயிருந்தது.

உறைக்கும் வெய்யிலிலிருந்து முகத்தைத் தப்ப வைக்க கையிலிருந்த கொப்பியை தலைக்கு மேல் உயர்த்திய படி மௌனமாக நடந்து வந்த பாபுவைப் பார்க்கிறாள் துஸ்யந்தி.

"பாவம்..... நாட்டு நிலமையால ரியூசனுக்குப் போகிற எனக்குத் துணையா வந்து பெறதே இவனுக்குத் தினசரி வேலையாப் போச்சு.....முந்தியென்டால்.... பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிலே வச்சிருந்தினம்....... எப்பவும் ஆரும் போகலாம் வரலாம். இப்ப..."

வேதனைப் பெரு மூச்சு நீளமாய் வெளிப்பட "இப்படி அநியாயம் இன்னும் எவ்வளவு காலம்......." கெதியில திருந்தப் போகினம்."

பிலேச் சதிகாரம் பண்ணும் புல்லுருவிகள் கூட்டம், ஈழப் பெண்களுடன் கீழ்த்தரமாக நடந்து கொள்வதை தமது கேளிக்கையாக்கியிருந்தனர். தனிமையில் செல்லும் பெண்களுடன் இவர்கள் செய்யும் வம்புகளுக்குப்பயந்துதான்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிந்தனையுடன் நடந்தவர்களை பழைய சைக்கிள் ஒன்றின் 'லொடலொட' என்ற சத்தம் நிமிர வைத்தது. சைக்கிளில் எதிரே வந்து கொண்டிருந்த முதியவர் அவர்களுக்கு பரிச்சயமானவர்..

"ரியூசனுக்கோ? பார்த்துப் போங்கோ.....இப்ப காலமும் கெட்டுக் கிடக்கு"

அவர்களின் புன் சிரிப்பை பதிலாக வாங்கிக் கொண்டு அவர்களின் பின்னே சென்று திருப்பத்தில் மறைந்தார்.

அவர்கள், தெருவொரத்தில் இருந்த மதகு வளைவை அண்மிப்பதற்குள் பின்னேயிருந்து இந்திய இராணுவ 'ட்றக்' அவர்களுக்குக் கிட்ட வந்துவிட்டது. உள்ளிருந்து இந்தியஇராணுவ உடையில் தமிழ்த் துரோகிகள் அட்டகாசமாகஇறங்கினர்.

துஸ்யந்தியை நோக்கி......

"ஏன் பாவாடை கட்டினி? சீலை கட்டிறை என்ன?.." தொடர்ந்து கீழ்த்தரமான வார்த்தைகள் கேள்விகளாக வெளிவருகின்றன..

அவமானம் சுரீரெனத் தாக்க தலையைக் கவிழ்த்துக் கொண்கிறாள் துஸ்யந்தி.

"ஏன் கீழே பார்கிறாய்?....எங்களைப் பிடிக்கவில்லையோ?" தடியன் ஒருவனின் கேள்வியை....

என்ன இது? நீங்கள்...."ஆத்திரத்துடன் இடை மறித்த பாபுவை அப்போதுதான் கவனித்தவர்கள், கன்னத்தில் அறைந்து கீழே தள்ளினார்கள்.

" நாங்கள் இப்படித்தான் நடப்பம். க்னக்கக் கதைச்சியெண்டால் சுட்டுப்போடுவோம்".

ஆத்திரம் கண்களில் ஜொலிக்க, கையை ஓங்க நினைத்த அந்த 13 வயதுச் சிறுவன், ஒரு கணம் சிந்தித்தான். அவர்கள் கரங்களில் பளபளக்கும் கறுப்பு நிறத்துப்பாக்கிகளை மீண்டும் ஒரு முறை பார்த்தான்.

"நீங்கள் இருக்க வேண்டிய இடம் உதுவல்ல" என்று அந்தத் துப்பாக்கிகளிடம் உரக்கக் கூற வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. நாவிலில் பணிவை வில்லங்கமாக வரவழைத்துக் கொண்டு

"அக்காவை விடுங்கோ! ரியூசனுக்குப்போக நேரம் போகுது." ஆனல் அந்தக் கேடிகள் தங்கள் கேள்விகளை விடுவதாக இல்லை. துஸ்யந்தியைத் துளைத்தனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாபுவின் உள்ளமும் உடலும் துடித்தன, அந்த அக்கிரமக்காரர்களிடமிருந்து தன் அக்காவைக் காப்பாற்ற எண்ணி வந்த வழியே பார்க்கிறன் யாராவது துணைக்கு வரமாட்டார்களா? என்று.

ஒரு முதியவர், தன்னால் இயன்றளவு வேகமாகச் சைக்கிளை ஓட்டிக் கொண்டு வருகின்றார். அவர், முன்னம் இவர்களின் புன்சிரிப்பை வாங்கிச் சென்றவர்; இப்போது வழியில் ட்றக்கைப் பார்த்து விட்டு அவசர அவசரமாக அனுதாபத்தைக் கொண்டு விரைகிறார் இவர்களை நோக்கி. கிட்ட வந்ததும் சைக்கிளில் இருந்து இறங்கி,

"ஐயா! குமரய்யா! தெரிஞ்சு தெரியாமல் பிழையேதும் செய்திருக்குங்கள். மன்னிச்சு விட்டு விடுங்கோ – ஐயா!"

"நாங்கள் பிழையொண்டும் செய்யல்ல அப்பு"

"பொத்தடா வாயை" முதியவர் பாபுவை அதட்டி விட்டு அவர்களிடம் வேண்டினார்.

சின்னஞ் சிறுசுகள், பெரிய மனசு வைச்சு விடுங்கோ தம்பி ராசா!

"பெரியவர் சொல்லுற படியால் விடுறம்....தடிப் பயலே பொடியா.....கவனமாப் போ."

கூறிவிட்டு நழுவிச் சென்று ட்றக்கில் கொண்டனர்.

கைகால் நடுங்க, நாக்கு விறைக்க நின்று கொண்டிருந்த துஸ்யந்திக்கு இப்பொழுதுதான் உயிர் மீண்டது.

"தம்பி! இவங்களோட நாங்கள் இப்படிக் கதைக்கப் படாது. மிருகங்களிலும் கெட்டவர்கள்—தன்மானத்தை கக்கத்துக்குள்ள வைச்சுக் கொண்டு இப்படித்தான் கதைக்க வேண்டியதாக் கிடக்கு" என்றார் பெரியவர்.

பாபு மௌனமாக எதையோ யோசித்தபடி நின்றான்.

துஸ்யந்திக்கு இன்னும் தலை கிறுகிறுத்துக் கொண்டிருக்கிறது. அந்த முரடர்களின் தோற்றம் அவள் கண்களைவிட்டு இன்னும் மறையவில்லை. ஆனாலும் உள்ளிருக்கும் அவள் மனம், "அந்த முதியவர் வராவிட்டால்.....என் நிலை....? அப்படியானால் நாட்டில் பெண்களின் நிலை.....இப்படித்தான் இருக்கப் போகிறதா?....மீட்சியே இல்லையா?"

என்பதையே திரும்பத் திரும்பத் எண்ணி கொண்டிருந்தது.

பாபு சிந்தனையில் ஆழ்ந்தவனாகவே

"வாங்கோ அக்கா போவம்...."

முதியவர் சைக்கிளை எடுத்து உருட்டியபடி "நானும் உங்களுடன் வாறன். பிறகு கொண்டு வந்து விட்டிட்டுப் போறன்"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாபு காலில் செருப்பு இல்லாமல் நடப்பதைப்பார்த்து விட்டு "உன்னை அவர்கள் விழுத்திய இடத்தில்செருப்பு விட்டு விட்டாயா?"

'ஓம் அப்படித்தான்' என்று தலையசைத்தான்
"சிறிது தூரம்தான்–திரும்பிப் போய் எடுத்து வரலாம். ஆனால் இப்போது அது எனக்குத் தேவையில்லை... இந்தக் கொதிக்கும் வெய்யிலைத் தாங்கும் சகிப்புத் தன்மையும், தொடர்ந்து நடக்கும் உறுதியுமே என் பாதங்களுக்கு இனி தேவைப்படப் போகுது"

துஸ்யந்திக்கு அவன் பதிலை சட்டெனப் புரிந்துகொள்ள முடியவில்லைப் போலும் திரும்பவும்
"என்ன?"

அவன் பதிலளிக்கவில்லை நடந்து கொண்டிருந்தான்.

பெரியவரும் சைக்கிளை உருட்டிக் கொண்டு வெகமாய் – நடையைக் கட்டிக் கொண்டிருந்தார்.

*–*–*–*–*

(நன்றி–உணர்வு)

## அதிஸ்டலாபச் சீட்டுப் பற்றிய அறிவித்தல்

தமிழீழ யுத்தத்தில் காயமடைந்த ஊனமுற்ற போராளிகளுக்காக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க லண்டன் கிளையினரால் இம்மாதம் 3.3.90 நடைபெறவிருந்த - இச்சீட்டு இழுப்பின் கால எல்லையை அடுத்தமாதம் 6.4.90 அன்று நடைபெறவுள்ளதாக விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# திரும்பிப் போவேன் மண்ணுக்கு

-சுபா.

எனது மக்களையும்
என் இனிய தேசத்தையும்
நினைத்து அழுகின்றேன்
தந்தையரில்லை
தாய்மார் விதைவைகளாயினர்

எங்கும் ஒப்பாரியும்
புலம்பலும்
அழுகையும் பயக்கடிப்பும்
அவலம் நிறைந்தது
மண்ணில் இன்றுமாய் !

அருமையானவர்களே !
என் உயிரினும் இனியவர்களின் சாவு
தினமும் இந்திய இராணுவத்தால் எழுதப்படுகிறது
எம் இனிய மண்ணின் நாட்களைச்
சிறையிட்டார்கள்.

நாளை
அந்நிய தேசமொன்றில்

அகதி என முகவரித்து
எதிர் காலத்தை இயற்ற மறந்தவளாய்

சொந்த மண்ணில்
எனக்கு சுதந்திரம் இல்லை என்று '
அந்நிய மண் வந்த புத்தடிமை நான்

என் உடலில் வலுவிருக்கு
என்னுள் பொதிந்த
" ஒரு துளி மனிதம் " போதும்
திரும்பிப் போவேன் மண்ணுக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நிழலல்ல நிஜம்

— ஒளச்சி

"ஏண்டாலும் பெடியள் விச்சுளியங்கள் நிண்டாலும் தப்பி விருவாங்கள்" முற்போக்காளன் என்று தன்னைத்தானேவிளம்பரப் படுத்திக் கொள்ளும் ஓர் பிற்போக்குவாதி, படு படு பிற்போக்குவாதி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை எமது தேசிய வீரர்களைப் பார்த்து இப்படித்தான் தனது அஜீரணத்தை வாந்தி எடுத்தார்.

அதாகப்பட்டது "பொடியங்கள் தாக்கி விட்டு வேகமாக ஓடி ஒளித்து விடுவாங்கள். நெஞ்சுத் துணிவற்ற, எதிர்த்து நிற்க திராணியற்றஉவங்களால் ஒருக்காலும் விடுதலை கிடைக்காது.
வர்க்கப் புரட்சி ஒன்று நடத்தவேணும், கல்வியறிவுள்ள முற்போக்கு வாதிகளால் (உதாரணமாக தன்னைப்போல்) முன்னெடுத்துச்செல்லப்படுகின்ற புரட்சி தான் நல்ல மாற்றத்தைக் கொண்டுவரும், இதிலை எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையிருக்கு.
இப்படித்தான் இந்த மாமனிதர் (வயதில் மூத்தவர்) தனது பிரசங்கங்களின் போது குறிப்பிடுவார்.

(இவரது கருத்துப்படி ஒரு புரட்சியைச் செய்வதாயின் பல்கலைக்கழகம் புகுந்து ஏதாவது பட்டங்கள் பெற்றிருக்க வேண்டும், அப்படிப்பட்டங்களைப் பெறும்போது தான் முற்போக்கு, புரட்சிகர சிந்தனைகள் ஒருவரோடு ஒட்டிக் கொள்ளும். அப்படியாயின் பாட்டாளிகளே தலைமைதாங்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது வேறு ரகமோ? இது ரொம்ப இடிப்பதாய் இருக்கிறதே.)

ஒரு முற்போக்காளன், ஒரு புரட்சியாளன் என்று தன்னைத் தானே பெருமைப்படுத்திக் கொள்ளும் பேர்வழி, அடிமைப் பட்டிருக்கும், சீரழிக்கப்பட்டிருக்கும் தான் சார்ந்த சமூகத்தை விடுவிக்க அந்தச் சமூகத்துடன் சேர்ந்து தானும் போராடியிருக்க வேண்டும், தனது இளமைப் பருவத்தில் இருந்து முதுமைப் பருவம் வரை தன்னை முற்போக்குஎண்ணங் கொண்ட புரட்சியாளனாக விளம்பரப் படுத்துவதிலேயே முனைப்புக் கொண்டாரேயொழிய எந்தச் செயல் திட்டங் களிலும் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஆனல் " பெரியவர் பொல்லாதவிச்சுனியர்" அங்கு சனங்களுக்கு அடிவிழேக்கை, சனங்கள் தெருத்தெருவா செத்துக்கிடக்கிறதைப் பார்த்துப் போட்டு இடத்தை விட்டு மாறினல் தான் கடைசிக் காலத்தை சே(ƒ)வ் ஆக்கிப் போடலாம் எண்டு பிளான் போட்டுட்டார்.

புரட்சிக்காரன் எண்டு சொன்னப் போல வாழ வழியில்லாமல் கோவணத்தோட திரிகிருர் எண்டு அர்த்தமில்லே.

அக்கம் பக்கத்திலே சனங்கள் குடிசையிலே வாழ்ந்தாலும் கோபுரத்தில வாழ்ந்தவர்.

பெரியவரிட்ட முதலாளித்துவ வழிமுறையோட சேர்த்த பணம் போதுமானதாய் இருந்ததால பிறகென்ன சுணக்கம் எண்டு பெரியவர் " பிளேற் " எடுத்திட்டார் (குடும்பத்தோட).

அங்கு நாட்டுக்காக இளங் குருத்துக்கள் நாளும் பொழுதும் மடியேக்கைதங்கட வாழ்க்கையை நினைக்காமல் மண்ணை மீட்டுப்போட வேணும் எண்டு எதிரியோட மோதி மோதி மூச்சிளந்து போகேக்கை, அதுகள் தாய் தகப்பனை பிரிஞ்சு சகோதரங்களைப் பிரிந்து நாட்டை மீட்கிற வரை துன்ப வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்று காட்டிலும் மேட்டிலும் ஊண், உறக்கமில்லாமல் யாகம் செய்யேக்க...

உண்மையில் யாகம் தான் செய்யுதுகள்,

ஆனல் இங்கு என்னவெண்டால்...

இந்தக் குதர்க்க வாதிகள் கதையளக்கினம்...

கதிரையளைத் தேய்க்கிறதும், கடதாசியளை நிரப்பிறதும், மேடையில் காட்சி தருறதும் தான் இவையளின்ரை மெயின் தொழில்

இவையளும் அந்தக் கூட்டணிக் காரரர் போலத்தான் மேடையில ஏறிட்டினம் எண்டால்...

" அப்பா" ரொம்பக் கில்லாடிகள்

கூடியிருக்கிற பத்துச் சனத்துக்கை தங்களை அறிவாளியள்எண்டு காட்டுறத்துக்காக என்னுமாக் கதையளக்கினம்
ஆனல் இவையள் " வெறுவாளியள் " தான் எண்டு சனத்துக்கு தெரியும்
பாலஸ்தீனத்தைப் பற்றிக் கதைப்பினம், ருஉந்யா, சீனவைப் பற்றிப் பேசினம் பொற்சோகளிய மக்களின் பாரம்பரிய நடனம் பற்றி காரசாரமாக் கருத்துப் பரிமாற்றம் செய்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இறுதியில் பம்பாயில் சன, பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்யிற வழிவகைகள் பற்றி ஆராய்வினம்,

ஆனல் எங்கட மண்ணைப் பற்றி கதைக்க மாட்டினம், அப்பிடிக் கதைச்சாலும் அங்கத்தைச் சனங்களுக்கு மூளையில்லாததால தான் இப்படிச் சாகுதுகள் எண்டு தீர்ப்பளிப்பினம்.

இவையளின்ர கருத்துப்படி அங்கத்தைச் சனங்களெல்லாம் இங்க வந்து இவையளின்ர பாடங்கேட்டுட்டுப் போய்போராட வேணும், அல்லது புரட்சிக்கு முன்னேடியாக பல்கலைக்கழகத்தில பட்டம் வாங்க வேணும்.

உலக ஓட்டத்தை நன்கு அவதானித்து, எமது மண்ணிற்கு உரித்தான அக, புற சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு ஒழுங்காக்கப் பட்ட, வகுத்துக் கொண்ட தமிழ்மக்களின் விடுதலை போராட்டப் பாதையை இவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

ஏனெனில் ஏற்றுக் கொண்டால் குதர்க்கம் பேச முடியாதே.

சரி, இப்படியான மனிதர்களின் பொது வாழ்க்கை மட்டரகமானதாக அமைந்து விட்டதே என்று சலிப்புடன் பொறுத்துக் கொண்டு சாரளங்களூடு இவர்களது குடும்ப வாழ்க்கையை எட்டிப் பார்த்தால் பொறுக்க முடியாத கெட்ட நெடி கண்களை இருளடையச் செய்து காதுகளைச் செவிடாக்கிவிடும், அவ்வளவு அசிங்கம்.

கல்வியறிவில்லாத ஓர் குடியானவன் மனநீதி அடிப்படையில் தன் குடும்பத்தில் புரிந்து கொள்ளாமலே புரிகின்ற முற்போக்கான (சாதி, சமய, சீதனம்) காரியங்கள் கூட இந்த பவான் வியாபாரிகளால் செய்ய முடிவதில்லை,

ஏனெனில் இவர்கள் முற்போக்கு முலாம் பூசப்பட்ட பிற்போக்கு வாதிகள்.

அறிவாழியின் தோரணையில் மேடையில் தோன்றி, முற்போக்கு சிந்தனைகளை வாயளவில் உதிர்த்தி புரட்சியாளராக உம்மை வெளிக்காட்ட நீர் எடுக்கும் பிரயத்தனம் இருக்கிறதே.......

"அடேங்கப்பா"..."ரொம்பத் தமாசு பண்ணிறிங்கடோய்"

—ஊசி—

* * * * *

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பேருண்மை

இல்லை மகனே
அப்படிச் சொல்வது முற்றிலும் தவறு
புரட்சிக்காரர்கள் எல்லாம்
முகம் மழிக்காமல் திரியவேண்டும் என்பதல்ல
முகம் மழிக்காமல் திரிபவர்களெல்லாம்
புரட்சிக்காரர்கள் என்பதுமல்ல
துப்பாக்கியுடன்
காடுகளில் வாழும்
ரோமமே முளைக்காத உன் அண்ணனை
பார்த்தாய்தானே.
பல வருடங்களாய்
சிறையில் வாடும் உன் தந்தையின் முகத்தைப்
பார்த்தாய்தானே
அவர்கள் தான் மகனே புரட்சியாளர்கள்
நீ சொல்வதைப்போல்
இந்தப் படத்தில் இருக்கும்
தாடி ஆசாமியல்ல.
இவர்களெல்லாம்
பேடிகள் மகனே ! பேடிகள் !

தில்லை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழ செய்திகள்

## * தமிழீழ பிரதேசங்கள் விடுவிக்கப்படுகின்றன *

சுமார் இரண்டரை வருட கால இந்திய இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழீழ பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. பெரும் இராணுவ இழப்புகளினாலும்–தோல்விகளினாலும் தமிழீழம்மீதான தனது நேரடி ஆக்கிரமிப்பை வாபஸ்பெறும் நிலையிற்கு இந்தியா தள்ளப்பட்டதின் விளைவாக முழுமையான படை விலகல் இடம்பெற்று வருகின்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மூதூர் ஆகிய பகுதிகளை விட்டு இந்தியப் படையினர் வெளியேறி உள்ளனர். இந்திய இராணுவவெளியேற்றம் இடம் பெற்று சிலமணி நேரங்களில் அவ்வப் பிரதேசங்களை விடுதலைப் புலிகள் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். இக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் சிவில் நிர்வாகம்– மற்றும் நடைமுறைகளை உடனடியாக முடுக்கி விடப்படுகின்றன.

## * "றோ" வின் மற்றுமோர் தோல்வி *

இந்திய ஆதிக்க நோக்கின் திட்டமிடல் அமைப்பாக விளங்கும் இந்திய உளவுத் துறையான "றோ" எனும் பயங்கரவாத அமைப்பு தமிழீழம் மீதான தனது கணிப்புகள் – முயற்சிகள் என்பன தோல்வி கண்டு, நேரடி இராணுவஆதிக்கமும் தோல்வி காண்பதைச் சகிக்க முடியாது ஆடத்த முயற்சியாக தமிழ் கூலிப் படை ஒன்றை பலத்தஇராணுவ உதவிகளுடன் அமைக்க முற்பட்டனர்.

EPRLF, TELO, ENDLF, PLOT கும்பல்களைச் சேர்ந்த பயங்கரவாதிகளையும், பலாத்காரமாகப் பிடிக்கப்பட்ட சிறுவர்களையும் கொண்டதாக T.N.A எனப்படும் ஆயுத பலம் மிக்க கூலி இராணுவம் RAW அதிகாரியான சந்திரன் என்பவனின் தலைமையில் அமைக்கப் பட்டது. இந்தியப்படை வெளியேறிய மாவட்டங்களில் இவ் T.N.A ஆயிரக் கணக்கில் குவிக்கப்பட்டன. எனினும் உயர் போர் ஆற்றலும், மக்கள் ஆதரவும் மிக்க விடுதலைப் புலிகள் சில மணி நேர மோதல்களின் பின்னர் T.N.A பயங்கரவாதஅமைப்பை சேதமாக்கி–பலாத்காரமாகப் பிடிக்கப் பட்ட இளைஞர்களை விடுதலை செய்துள்ளனர். T.N.A யிடம்இருந்து ஆயிரக் கணக்கான ரைபிள்கள், லட்சக் கணக்கானரவைகள், பல கால்காஸ்ரோ ரக டாங்கி எதிர்ப்புச் சாதனங்கள் மற்றும் நவீனரக இயந்திரத் துப்பாக்கிகள் என்பன கைப் பற்றப்பட்டன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



*** புதிய வாழ்வு – புதிய வடிவம் ***

இந்தியப் படை வாபஸ் உடன் பலம் மிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழீழ பிரதேசங்களைதமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்து அதன் மூலம் நீண்ட கடினமான வாழ்வை மேற்கொண்ட மக்களுக்கு ஒரு விதத்திலான சகஜவாழ்வை நிறுவுவதில் குறியாக உள்ளனர். கல்வி நிலையங்கள், போக்கு வரத்து, வைத்தியத் துறைகள் வர்த்தக நிலையங்கள் என்பனவும், வங்கிகள்பிற அரச நிறுவனங்கள் என்பனவும் இயங்க ஆரம்பித்துள்ளன. இதன்மூலம் சகஜ வாழ்வைத் தோற்றுவிப்பதிலும் அடுத்தகட்ட போராட்டத்திற்கான அரசியல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதிலும் விடுதலைப் புலிகள் வேகமாகச் செயல்ப் பட்டு வருகின்றனர். கிராமிய மட்டங்களிலிருந்தும்–தொழிலாளர், விவசாய மட்டங்களிலிருந்தும், மகளீர் மட்டங்களிலிருந்தும், உருவாக்கப்படும் மக்களுக்கான ஜனநாயகபூர்வமான கட்சியை விடுதலைப்புலிகள் உருவாக்கியிருக்கின்றனர்.

*** "விடுதலைப்புலிகள் – ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தைகள்**

கட்டம் கட்டமாக இடம் பெறும் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்கள் தற்போது உயர் மட்ட அளவில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களின் முதலாவது வெற்றியாக இந்திய இராணுவம் மீதான அரசியல் நெருக்குவாரமும்இராணுவ வெளியேற்றமும் அமைந்தது. இரண்டாவது வெற்றியாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி எனும்கட்சி உருவாக்கப் பட்டு அதனது நுட்பமான பணிகள் துரிதப்படுத்தப் பட்டு வருகின்றன. இதன் மூலம் எதிர்காலப் போராட்டத்திற்குத் தேவையான சர்வதேச பார்வையிலானஅரசியல்அந்தஸ்தை தமிழீழம் பெற்றுவருகின்றது. மூன்றவதாக ஒரு தேர்தல் மூலம் விடுதலைப்புலிகள் முன்வைக்கும் கோரிகைகளுக்கும், போர்வடிவங்களுக்கும் மக்கள் ஆதரவை உலகிற்கு வெளிக் கொணர்வதற்கான முன்முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன.

*** "ஐ. நா. மனித உரிமைகள் கமிசனில் ஈழத் தமிழர் விவகாரம்.**

தை மாதம் 28ம் திகதி ஆரம்பமாகிய U.N.H.R.C 46 வது கூட்டத்தொடரின் போது ஈழத் தமிழ் பேசும் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்கள் பெருமளவு இடம்பெற்றுள்ளன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

U.N.H.R.C உபகமிட்டிகளான காணமல்போனவர்கள், படுகொலைகள், சித்திரவதைகள் பற்றிய ஆய்வுக் குழுவினர் (WORKING GROUPS) 46 வது தொடருக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இந்தியப் படைகள்விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என காரணம்காட்டி தமிழ் பேசும் மக்கள் மீது புரிந்த கோர வெறியாட்டத்தை சுட்டிக்காட்டியுள்ளனர். சித்திரவதை பற்றிய ஆய்வுக் குழு இந்தியப் படைகளின் கொடூரசித்திரவதை முறைகள் பற்றி எடுத்துரைத்துள்ளது.

*கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இடம் பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் உப கமிசன் தொடருக்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் சமர்ப்பிக்கப் பட்ட1989 தை தொடக்கம் ஆனி வரைப்பட்ட 144 தமிழ்பேசும் மக்கள் மீதான படுகொலை விபரங்கள் படுகொலைகள் பற்றிய ஆய்வுக்குழுவின் அறிக்கையில் 387வது குறிப்பாக குறிப்பிடப் பட்டுள்ளது..

*46வது தொடரில் உரையாற்றிய திருமதி. வெரிறை கிரஸ் (மக்களுக்கான விடுதலை மற்றும் உரிமைகள் பற்றிய சர்வதேச லீக்) இந்தியப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறுவது அவசியமானது என வலியுறுத்தியுள்ளார்.

*12 மனித உரிமைகள் அமைப்புக்கள்சேர்ந்துகையொப்பமிட்டு பிலிப்பைன்ஸ் மனித உரிமைகள் பிரதிநிதியால் பல U.N.H.R.C இல் வாசிக்கப்பட்ட அறிக்கையில் வல்வெட்டி படுகொலைகள், தமிழ்ப் பயங்கரவாதக்குழுக்களின்கட்டாய பயிற்சி வன்முறைகள் பற்றி குறிப்பிட்டதுடன் விசேட ஆய்வாளர் ஒருவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டுநிலைமைகள் ஆராயப்படவேண்டும் எனக் கோரியுள்ளது.

*****

---

**விடுதலை என்பது போராட்டத்தினூடாகவே வென்றெடுக்கப்படுகிறது, அது எவரதும் அன்பளிப்பாக தரப்படுவதில்லை.**

— *மா-சே-துங்*

---

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மாவீரர் தினம்

மனித சமூகம்—அதனது கட்டமைப்பு—அதனது பொருளாதார, கலாச்சார நிலைப்பாடுகள் என்பன தொடர்ச்சியான மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உரியது. மனித சமூகம் தொடங்கிய நாட்தொட்டு இன்று வரையிலான வளர்ச்சி இத் தொடர்ச்சியான மாற்றத்தின் பரிமாணங்களே ஆகும்.

இந்த தொடர்ச்சியான மாற்றம் இன்றைய உலகை ஏற்றத்தாழ்வுள்ள, முரண்பட்ட சமூக சுற்றுடலையும்—தேசஅமைவுகளையும் கொண்டதாக மாற்றியுள்ளது.

இந்த ஏற்ற இறக்கங்கள் முரண்பாடுகள் என்பன பல கோடி மக்களை "சித்திரவதை" செய்யும் நி[redacted]யும் சில நூறு—சில ஆயிரம் மக்களை சொர்க்கத்தில் (?) வாழவைக்கும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த தொடர்ச்சியான வளர்ச்சிப்போக்கின் வழியே இந்த முரண்பாடுகள்—அடக்குமுறைகள் என்பனவற்றின் வழியே பாதிக்கப்பட்ட மக்களுக்கான புதிய மாற்றத்திற்காக — புதிய போக்கிற்காக பிறப்புக் கொண்டவர்களே போராளிகள்.

போராளிகள் எனப்படுபவர்கள் வரலாற்றை இயக்கும் மக்கள் சக்தியை கட்டி எழுப்பியும்—திசைகாட்டியும் புதிய வரலாற்றிற்கு உயிர் கொடுப்பவர்கள்.

சாதாரண மனித சமூகத்தின் நேர்மையான ஆவேச வெளிப்பாடுதான் போராளி.

"போராளிகள்" எனப்படுவோர் புதிய வாழ்வுக்கும்—புதிய சுபீட்சத்திற்கும் மக்களை இட்டுச்செல்லும் வரலாற்றுப் பிறப்புகள் ஆவர்.

தனது சொந்த வாழ்வு—சொந்த நலன்கள் என்ற குறுகிய வட்டத்தை தாண்டி சமூகத்தின் வாழ்வு—நலன்களுக்காக போராடும் மனித ஆற்றல் தான் போராளிகள்.

இந்த நோக்கில்

எமது தாயகம் — 400 ஆண்டுகால அடிமை இருளில் எது சுதந்திரம், எது அடிமைத்தனம் என பகுத்தறியக்கூட வாய்ப்பற்ற தொடர்ச்சியான கைவிலங்கின் கீழ் சின்னாபின்னப் படுத்தப்பட்டபோது அதனை எதிர்த்து—பூதகரமானஇராணுவ இயந்திரங்களை எதிர்த்து—மக்களை கட்டி எழுப்பி ஒரு உண்மையான விடுதலைக்காகப் போராடும் வரலாற்றுச் சக்தி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இந்த வரலாற்றுச் சக்திகளின்–போராளிகளின்– வாழ்வும் சாவும் ஒரு தேசத்தின் உணர்வு பூர்வமான எழுச்சியுடன் சம்பந்தப்பட்டது.

ஒரு போராளியின் சந்தோசம்–துன்பம் அனைத்துமே தேசம்–மக்கள் தொடர்பான அவனது நேசத்தின் வகைப்பட்டது. சுருக்கமாக எம் தமிழீழ மக்கள் சமூகத்தின் எதிர் காலமே மக்கள் சமூகத்தை தலைமைதாங்கி–தியாகம்புரிந்து –வழி நடாத்தும் போராளிகளின் "வாழ்வில்" தான் தங்கியுள்ளது.

இந்த வாழ்வு உடலும் உயிரும் தாங்கி அவன் நடாத்தும் போராட்ட வழ்வு–உணர்வும் உயரியஅர்ப்பணிப்பும் காட்டிய மரணத்தின் பின்னை வாழ்வு என இரு வகைப்படுகின்றன. முன்னையதில் அவன் இயங்குகின்றான், சமூகத்தை தன்னோடு அழைத்துச் செல்கின்றான். பின்னயதில் அவன் இயக்குகின்றான், சமூகத்தை முன்னோக்கி தள்ளுகின்றான்.

இப் பின்னய வாழ்வு வீரமானது–தியாகபூர்வமானது. அதே வேளை அவனைச்சார்ந்த சமூகத்திற்கு சோகமானதும் துன்பகரமானதும் கூட. இளைய மலர்கள் தென்றலைச் சுகிக்க வேண்டிய வயதில் காற்றோடும், மண்ணோடும் கலந்து வாழ்வது மனித இதயங்களை கனக்க வைக்கிறது. இந்தக்" கனத்தை" ஏற்றுக்கொள்ளவும்–இந்தக் "கனத்தின்" பரிமாணங்களைவரலாறு பூராவும் தாங்கி வைக்கவும் போராடும் மக்கள்சமூகத்திற்கு ஒரு வடிகால் தேவைப்படுகின்றது. உலகின் ஒவ்வொரு தேசமும் –வரலாறுகளும் தமது வாழ்வுக்காக மறைந்த தேசிய வீரர்களை காலம் பூராவும் கௌரவித்து வருகின்றன. வரலாறு பூராவும் அந்த கௌரவத்தை பேணுவது தமது "தனிச்சிறப்பான அடையாளத்தை" உலகிற்கு காட்டும்நிகழ்வாகக் கூட பெருமைப்படுகின்றன. அது எமக்கும் தேவையானதும் உரியதும் ஆகும்.

எம் தேச விடிவிற்காக 1300 ற்கு மேற்பட்ட இளைய தோழர்களும்– தோழிகளும் மரணித்துள்ளனர். ஆயிரம் கனவுகளைச்சுமந்து வசந்தத்தை அனுபவிக்கும் வயதில் ஒரு புதிய மாற்றத்திற்காய் மண்ணுக்குள் விதைக்கப்பட்ட அந்த வீர மறவர்களின் வாழ்வும் – வரலாறும் எம் தேசப் போரின் உயரிய பக்கங்கள் ஆகும். எமக்குப் பெருமை தரக் கூடிய பதிவுகள் ஆகும். அந்தப் பதிவுகளை நினைவு கூருவதும் எம் தேசம் வாழும் நாள் மட்டும்–இவ் வுலகம் வாழும் நாள் மட்டும் அதனைப் பாதுகாப்பதும் ஒவ்வொரு தமிழீழ மனித நெஞ்சங்களின் கட்டாய பணியாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அத்தகு உயரிய பணிக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் 27.11.1989 இனை மாவீரர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

முதலாவது எம் தேச தேசிய வீரன் சங்கரின் மரணத்தின் பின்னை வாழ்வு – எம்மை இயக்கும் வாழ்வு – ஆரம்பித்த நாள் இனிவரும் காலம் பூராவும் எம் தேசிய மாவீரர் நாளாக – எம் தேச விடுதலையின் பெருமை பாடும் நாள் ஆக – எம் தேசம் தன்னை எண்ணிப் பெருமைப் படும் நாள் ஆக அமையட்டும்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## சீனக் கிராமியக் கதை

## தொடரட்டும் போராட்டம் விடிவை நோக்கி!

நெடுங் காலத்திற்கு முன்னர், வடசைனாவில் வாழ்ந்து வந்தான் ஒரு முதியவன். வடக்கத்திய மலைகளின் மூடக்கிழவன் என அழைக்கப்பட்டான் அவன். அவனது வீடு தெற்கு நோக்கியிருந்தது. வீட்டின் வாசற்படிக்கு அப்பால் இரு மலைச்சிகரங்களிருந்தன, பாதையைத் தடை செய்தன.

அவன் தனது மக்களை அழைத்தான். அவர்கள் பற்றுறுதியுடன், மலைகளைத் தூர்க்கத் தொடங்கினர், மண்வெட்டி கொண்டு.

இதைக் கவனித்த, ஒரு கிழட்டு அதிமேதாவி, செருக்குடன் கூறினான், ''முட்டாளே என்ன செய்கிறாய்? இப் பெரிய மலைகளை உன்னால் தூர்த்துவிட முடியுமா என்ன? செயலில் நம்பிக்கை கொண்டு, முயற்சியில் இறங்கியிருந்த – மூடன் எனக் கருதப் பட்டவன் – முதியவன் சொன்னான்;

''இம் முயற்சியில் நான் இறந்தால் என் புதல்வர்கள் தொடருவர். அவர்களுக்குப் பின் எனது பேரக் குழந்தைகள், அவர்களாலும் முடியாவிட்டால் தலைமுறை, தலைமுறையாக இம் முயற்சி தொடரும். சலிப்படையாத முயற்சி வெற்றியைத் தரும். எனவேதான் செயற்பாட்டில் இறங்கினோம்.'' அதிமேதாவியின் வாய்ப்புலம்பலுக்கு செவிசாய்க்காது, தொடர்ந்தனர் வேலையை. அவ்விரு மலைகளும், அப்புறப்படுத்தப் பட்டன, பாதை திறக்கப்பட்டது.

www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்



# விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

## விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கட்டமைப்பு

கீழ்க்கண்ட அமைப்புகளின் கட்டமைப்பான விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி




# அரசியற்கட்சியின்-கொள்கை விளக்கம்

### விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

எமது இயக்கம் 1972ஆம் ஆண்டு எமது தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் எமது இயக்கம் தமிழ்ப் புதிய புலிகள் என்ற பெயரைக் கொண்டிருந்தது. 1976ஆம் ஆண்டு, வைகாசி 5ஆம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில், அரசியல் இராணுவப் பிரிவுகளின் கூட்டமைப்பாக எமது இயக்கம் செயற்பட்டது. அன்றிலிருந்து எமது இயக்கத்தின் அரசியற் பிரிவு சோஷலிசத் [illegible] மக்களின் [illegible]

தமிழீழத் தனியரசு இலட்சியத்தை வகுத்தது. மக்கள் அமைப்புகளை அமைத்து, வெகுசன இயக்கமாக விரிவாக்கம் கண்டு வந்தது. நீண்ட காலப் போர் நெருக்கடியும், இந்திய வல்லாதிக்க தலையீடும் காரணமாக எமது அரசியல் பிரிவை ஒரு கட்சி அமைப்பாக மாற்றும் எமது முயற்சிகள் தடைப்பட்டு வந்தன. புதிதாகப் பிறந்துள்ள இன்றைய சூழ்நிலையில் எமது அரசியல் கட்சியமைப்பை பகிரங்கமாகப் பிரகடனம் செய்து சட்டரீதியாகப் பதிவு செய்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரில் இயங்கப்போகும் எமது கட்சியமைப்பின் நோக்கம், கொள்கை மற்றும் [illegible] கோட்பாட்டு யாப்பை கீழே [illegible]

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## கட்சின் பெயர்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

## கட்சியின் சின்னம்

புலி

## கட்சியின் கொடி

புலிச் சின்னம் பதித்த சிவப்புக் கொடி

## கட்சி உதயமான தினம்

05-05-1976

# கட்சியின் குறிக்கோள்கள

1. தமிழ், முஸ்லீம் மக்களின் சமூக, அரசியல், பொருளாதார விடுதலைக்காகப் போராடுவது.
2. தமிழ், முஸ்லீம் மக்களுக்கு எதிரான சகல ஒடுக்கு முறைகள், சுரண்டல் முறைகளுக்கு எதிராகப் போராடுவது.
3. தமிழ், முஸ்லீம் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடுவது.
4. தமிழ், முஸ்லீம் மக்களின் தாயகப் பூமியின் பூகோளத் தனித்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணிப் பாதுகாப்பது.
5. சாதி அமைப்பை முற்றாக ஒழித்து, சமத்துவமான ஒரு சமூக அமைப்பை உருவாக்குவது.
6. சகல தொழிலாளர்களதும், விவசாயிகளதும் உரிமைக்காகவும், நலன்களுக்காகவும் போராடுவது.
7. இன ஒத்திசைவுக்கும், சமாதானத்திற்கும், சக வாழ்வுக்கும் பாடுபடுவது.
8. பெண் ஒடுக்குமுறையை எதிர்த்து, பெண்களின் விடுதலைக்காகப் போராடுவது.
9. இத்தீவிலுள்ள சகல மக்களினதும் அரசியல் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் உழைப்பது.
10. ஏகாதிபத்தியத்திற்கும், நவகாலனித்துவத்திற்கும் எதிரான உலக தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது.

# சித்தாந்தம்

ஜனநாயக சோசலிசத் தத்துவமே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் சித்தாந்தமாகும். சுதந்திரம், சமத்துவம், சமூக நீதி, சுயநிர்ணயம் ஆகிய அடிப்படை ஜனநாயக இலட்சியங்கள் ஒரு உண்மையான சோசலிச சமூகத்தின் தூண்களாக அமைய வேண்டும் என்பதே எமது கட்சியின் கருத்தாகும். ஜனநாயக இலட்சியங்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படும் சோசலிச அரசியல் அமைப்பையே நாம் விரும்புகிறோம். மானிடர்களின் ஆன்மீக வளர்ச்சியையும், செல்வச் சிறப்பையும் மேம்பாடு செய்யும் ஒரு உன்னதமான சமூக, அரசியல் அமைப்பை கட்டிஎழுப்புவதே எமது கட்சியின் குறிக்கோளாகும்.

1. அங்கத்தினர்.
2. மக்கள் சபைகள். [கிராமியக் கிளைகள்]
3. பிரதேச மக்கள் சபைகள். [உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளைகள்]
4. மாவட்ட மக்கள் சபைகள். [மாவட்டக் கிளைகள்]
5. விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்.
6. விடுதலைப்புலிகள் மாதர் முன்னணி.
7. விடுதலைப்புலிகள் தொழிற்சங்க சம்மேளனம்.
8. பொதுச் சபை.
9. மத்திய நிர்வாகக்குழு.
10. பொது மாநாடு.

# அங்கத்தினர்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அரசியற் குறிக்கோள்களையும், அடிப்படைக் கொள்கைகளையும், ஒழுங்கு விதிகளையும் ஏற்றுக் கொள்ளும் 18வயதிற்கு மேற்பட்ட தமிழ், முஸ்லீம் மக்கள் எவரும் எமது கட்சியின் உறுப்பினர் ஆவதற்கு தகுதியுடையவராவர்.

✧ கிராமிய மக்கள் சபைகள் மூலமாகவும், பிராந்திய, மாவட்ட அரசியல் அமைப்பாளர்கள் மூலமாகவும், கட்சி அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

✧ அங்கத்துவத்திற்கு விண்ணப்பிப்போர், கட்சியின் இலட்சியங்களுக்கும், கட்டுப்பாட்டிற்கும் கட்டுப்படுவதாக உறுதியளித்து அங்கத்துவபடிவத்தில் கையொப்பம் இடவேண்டும்.

---

''நாம் புதியதும் சிறந்ததுமான சமுதாய அமைப்பை
நிறுவ விரும்புகிறோம். இப் புதிய, சிறப்பான
சமுதாயத்தில் ஏழையும் பணக்காரனும்
இருக்க மாட்டார்கள். அனைவரும்
வேலை செய்யவேண்டியிருக்கும். தமது
பொதுவான உழைப்பின் பலாபலன்களை
- விரல்விட்டு எண்ணக்கூடிய செல்வந்தர்கள்
அல்ல —, ஆனால் உழைக்கும் மக்கள்
அனைவரும் அனுபவிக்க வேண்டும்,
இயந்திரங்களும், அபிவிருத்திகளும் அனைவரது
உழைப்பையும் எளிதாக்குவதற்கு பயன்பட வேண்டும்;
கோடிக்கணக்கான மக்களின் உழைப்பில்
ஒரு சிறு தொகையினர் செல்வந்தராவதை
அனுமதிக்கக்கூடாது. இந்தப் புதிய,
சிறப்பான சமுதாயமே சோஷலிச சமுதாயம்
என்று அழைக்கப்படுகிறது.''

— லெனின்

''கிராமப்புற ஏழை மக்களுக்கு''

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நெஞ்சு பொறுக்குதில்லையே

உலகத்தின் எந்தவொரு நாட்டிலும் எந்த ஒரு இனமும் பட்டிருக்க முடியாத பேரழிவிலே தமிழினம் இன்று சிக்கித் தத்தளிக்கிறது. மனித காருண்யம் அற்ற மகாபாதகம் தமிழ் மண்ணெங்கும் தலைவிரித்தாடுகிறது. விடிந்தால் விழிப்பது அனர்த்தத்திலே, பொழுது மறையும் வரை அகோரம், அட்டூழியம், தடுமாற்றம், சீரழிவு, வேதனை, வேகூரம், வதைப்பு, துடிதுடிப்பு, சித்திரவதை, தவிப்பு, கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு போன்றவை தமிழரின் பிரதேசமெங்கும் திட்டமிட்டு நடத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றன. பாரதப் படையினர் இந்த மண்ணிலே அமைதியை நிலைநாட்டுவதற்கு முன் இது போன்ற கொடுமை, கொடூரங்களை நாம் என்றுமே சந்தித்ததில்லை. எமது பிரதேசத்தில் இருந்து வெறுத்து ஒதுக்கப்பட்ட தீய சக்திகளைத் துணைகொண்டு பாரத தேசத்து அமைதிப் படையால் தமிழ் மக்கள் நாளாந்தம் பட்டுக்கொண்டிருக்கின்ற அநியாயங்களை அடக்குவது என்றால் பாரதக் கதையையே தோற்கடிக்கும் அளவிற்கு தொகுப்புக்கள் நிறையும். இதோ ஒருதுளி. நெஞ்சத்தை பிழிந்து வடிக்கின்றோம்.

புத்தூர் கிராமத்திலே கிழக்குக் கடற் கரையோரமாக அமைந்திருக்கின்ற கண்டிக்காடென்ற ஒரு சிறிய பகுதி ஓலைக் குடிசைகளைக் கொண்ட நான்கு வீடுகள் மட்டுமே இங்கு உண்டு. எங்குமே உப்பு மண் தரை. ஏழை விவசாயிகள் தமது கடினஉழைப்பால் சீவியப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும்பின்னியும் பின் தங்கிய பகுதி ஐயா. இதற்குக் கிழக்கே அமைந்து இருப்பது நிலஅமைப்பில் இதனையே ஒத்துள்ள வாதரவத்தை என்னும் பகுதியாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

05/06/1989 அன்று (திங்கட்கிழமை

பொழுது விடிந்ததும் விடியாத அதிகாலை வேளை. ஏழை உழைப்பாளிகள் வாதரவத்தையில் இருந்து தமது உபகரணங்களோடு வந்துகொண்டிருக்கின்றனர். கண்டிக் காட்டு மக்கள் தமது அன்றாடவேலைகளை செய்வதற்கு ஆயத்தமாகின்றனர். திடீரெனத் துப்பாக்கி சத்தங்கள் தகரம் பிள்ளையார் கோவிலடியிலும் அதற்கு வடக்கு கரையோரமாக உள்ள இரதப்பிற் பகுதியிலும் சரமாரியான வெட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருக்கின்றன

மக்கள் கிலிகொண்டு நாலா புறமும் ஓடுகின்றவேளையில் சுற்றி வளைத்து நின்ற இந்திய அமைதிப் படையினரும், எம்மினத்துத் தீய சக்திகளும் அனைவரையும் பிள்ளையார் கோவில் வாசலிற்கு இழுத்துவருகின்றனர். ஆண், பெண், வயோதிபர், குழந்தைகள் என்ற வேறுபாடு இன்றி அகோரமாக அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர் ஆலய வாசலிலே ஏழை மக்களின் வேதனைக் குரல்கள் ஐயோ, ஐயோ என வேகூரமிடுகின்றன. ஆண்கள் ஒரு கரைப்படுத்தி ஆலயத்தினுள்ளே அடித்துச் செல்லப் படுகின்றனர். ஆலயத்தின் இடுக்குப்பகுதிகளிலே பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டு மானபங்கப்படுத்தப்படுகின்றனர் குழந்தைகள் கதறுகின்றன. கத்திக்கத்திக் கண்ணீர் வடிக்கின்றன. எங்குமே ஐயோ அம்மா என்ற அவலஓலங்கள் ஆண்டவன் சந்நிதானத்திலே அமைதிப் படையின் அகோரத் தனம் இந்த நாகரீகத்திற்கே இழுக்குத் தேடிக் கொண்டிருக்கின்றது.

மீண்டும் பெருந்தொகையான இராணுவத்தினர் ஆலயத்தை வந்து சேர்ந்தனர். மக்கள் அனைவரும் ஆலயத்தின் வெளிவாசலுக்கு இழுத்து வரப் படுகின்றனர். சித்திரவதை அளவு கடந்து செல்கின்றது. மக்கள் ஒன்று சேர்ந்து "பிள்ளையாரே ஒன்றுமறியாத எங்களைக் கொல்கிறார்களே எங்களைக் காப்பாற்று" எனக் கதறிக் கண்ணீர் வடிக்கின்றனர். இந்தநேரத்திலே அமைதிப் படையின் துப்பாக்கிகள் முழங்குகின்றன. பலி! ஆலய வாசலிலே மனிதப் பலி! ஒன்று? இரண்டா? மூன்று? இல்லை ஒன்பது உயிர்கள்! கோவில் வாசலிலே மானிட இரத்தம் வழிந்தோடுகின்றது. அங்கே "அரோகரா" என்ற சத்தம் இல்லை. ஐயோ ஆண்டவா என்னும்அலறல்கள் தான். மகனின் பிணத்திலே தாய் விழுந்து கதறுகிறாள். சகோதரனின் குருதியில் சோதரி புரளுகிறாள். கணவனின் நிலை கண்டு மனைவி துடிக்கின்றாள். வேள்வி முடியவில்லை. இந்தியப் படைகளின் இம்சைத் திமிர் அடங்கவில்லை. குற்றுயிரும், குறையுயிருமாகத் துடித்துக்கொண்டிருந்த தமிழ்ப் பிணங்கள் குழந்தைகளை நோக்கி இழுத் சுடப்படுகின்றன. கொட்டும் எல்லையில் குடிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கொழுந்து விட்டு எரிகின்றன. தீப்பிளம்பின் நடுவே இழுத்து வரப்பட்டு உடல்களை இரக்கமற்றவர்கள் துடிக்கத் துடிக்கத் தூக்கிப் போடுகின்றனர். பாதகம்! மகா பாதகம்! பாரத பூமி பழம் பெரும் பூமி என அன்று பாடிய கவிஞன் இன்று இருந்திருப்பானேயானால் வேதனையால் வெட்கித் துடித்து இதயம் வெடித்து இறந்திருப்பான். அப்பாவி மக்களின் உயிர்களைக் கொன்று தமது குறிக்கோள்களையுடைய அரசியல் வித்தைகளைக் கையாளும் கடைகெட்ட தனம் என்றுமே உய்யும் வழிக்கு இட்டுச் செல்லாது என்ற உண்மையை பாரத பூமி ஒரு நாள் அறியத்தான் போகின்றது.

கூலிப்பிழைப்பிற்காக தம் குடிசையை விட்டு வந்த வாதரவத்தைப் பகுதியின் ஆறு தொழிலாளர்கள் அடையாளம் காண முடியாத அளவிற்கு உடல் கருக்கப்பட்டு உள்ளனர். கண்டிக்காட்டுப் பகுதியின் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் மற்றைய குடும்பத்தில் ஒருவரும் அவர்களது குடிசைக்குள்ளேயே தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளனர். அப்பகுதி வீடுகள் யாவும் கொழுத்தியெரிக்கப்பட்டு எங்குமே மாயனம் போலக் காட்சி தருகின்றது.

இந்திய நாட்டின் அந்நியப் படைகள் என்ற வகையில் இதுபோன்ற கொலைத்தர்ப்பார்கள் நாம் எதிர் பார்த்தவையே. ஆனால் இந்த மண்ணிலேயே தமிழனாய் பிறந்து இதே மக்களுடைய பாதுகாப்பிற்காக அன்று ஆயுதம் தூக்கியவர்கள் இன்று இந்தியப் பட்டாளத்தோடு சேர்ந்து தமது சொந்தச் சகோதரர்களையே ஈவு இரக்கமின்றி அடித்தும், சுட்டும் பொசுக்கியும் செய்திருக்கின்ற இந்த இழிநிலையை எண்ணுகின்ற போது எதிர்காலச் சமுதாயம் என்றைக்குமே இவர்களை மன்னிக்கப் போவதில்லை என்பது திண்ணம். எவ்வளவேனும் எம்மவர் என்ற நினைவின்றி அந்நியப் படைக்குத் துணைபோகும் இத்தீய சக்திகள் சமுதாயத்தில் இருந்தும் தூரத்தியடிக்கப்பட வேண்டும். தாம் தமிழ் மக்களின் காவலர்கள், அமைதிக்காகப் பாடுபடுபவர்கள் எனத் தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் இவர்களது அட்டாவடித் தனங்களால் இன்றைக்குத் தமிழ் மக்கள் பட்டுக் கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு அளவேயில்லை

தமிழ் மக்களைக் கூறுபோட்டுத் தன் சொந்த ஆதாயங்களைக் கருத்திற் கொண்டு அவற்றிற் காகவே ...ம் ... கொண்டிருக்கும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இந்திய நாடே நீ அமைதி தர வந்த நேரத்தில்நாம் வீதிகள் எல்லாம் ஓடியாடி அலைந்தோம். இன்று வீடுகளிலே இருந்தும் என்ன நிம்மதியையா கண்டோம்? இல்லை! நாள் தோறும் சுற்றி வளைப்புக்கள், முகாம்களுக்கு இழுத்துச்சென்று செய்யாத சித்திரவதைகள், ஆண், பெண் என்ற பேதமின்றி அனைவரையுமே அடித்துத் துன்புறுத்தல், வீடுகளிலே இழுத்துச் சென்ற இளைஞர்களை வீதிகளிலே ஆடு, மாடுகளைப் போலச்சுட்டுப்போடுதல் எங்குமே எவருமே நிம்மதியாகச் சென்று வரமுடியாத பயங்கரம். இவைகள் தான் இந்திய அமைதிப் படையினர் தமிழ் மக்களுக்கு நாளாந்தம் வழங்கி வரும் அமைதிச் சாசனங்கள்.

தனி ஒரு தமிழனைச் சுட்டு, குடும்பமாக அழித்து, இன்று கிராமத்தையே பொசுக்குகின்ற அளவிற்கு அமைதிப் படையின் ஆக்கிரமிப்புச் செயல்கள் அகன்று கொண்டு செல்கின்றன. வெளி உலகத்திற்கோ அத்தனையும் திரை போட்டு மறைக்கப்படுகின்றன.

சிந்திப்போம், நாம் அனைவரும் விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்டு விட்டோம். இனிவாழ்வா சாவா என்ற உணர்வே எம்முள்ளத்தில் கொப்பளித்து எழுகின்றது. நாம் மனிதர்களாக வாழ இந்த மண்ணிலே ஒன்றுமே இல்லை. புறப்படுவோம்! பாரதத்துத் துப்பாக்கிகள் எமது இரத்தத்தைக் குடித்து, தமது தாகத்தைத் தீர்த்துக் கொள்ளட்டும். இல்லையேல் இந்த மண்ணில் தமிழன் தமிழனை வாழட்டும் என வழி விட்டுச் செல்லட்டும்.

தமிழீழ மக்கள்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

..... மேலே தரப்பட்ட ஆக்கம் 03-10-1989இல் திகதியிடப்பட்டு மாணவர் ஒருங்கிணைப்புக்குழு-யாழ்ப்பாணத்தில் இருந்து எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

TAMIL EELAM

மகளிர் பிரிவு
27.1.1990

இன ஒடுக்கு முறைக்கும் சமூக பொருளாதார ஒடுக்குமுறைக்கும், அன்னிய ஆதிக்கத்திற்கெதிரானதுமான தமிழீழத் தேசிய இனத்தின் சுதந்திரப் போராட்டத்தில், அந்தத் தேசிய இனத்தின் சரிபாதிக்கும் மேலான அங்கத்துவத்தை வகிக்கின்ற பெண்களின் பங்கு மிகவும் அவசியமானது. தமிழீழவிடுதலைக்கும், சமூக, பொருளாதார மீட்சிக்கும் இப்பங்களிப்பு முக்கிய தேவையாகும்.

தமிழீழத்தில் வாழுகின்ற பெண்களானாலும் சரி அல்லது வெளிநாடுகளில் வாழுகின்ற நம்தேசத்துப் பெண்களானாலும் சரி "பெண் விடுதலை" என்ற பதத்தின் அர்த்தத்தையும், அதன் வெற்றிக்கான சாத்தியக் கூறுகளையும்ஆராய்ந்து தெளிவுறவுடன், அதைநோக்கிய செயல்பாடுகளில் இறங்குவது இன்றியமையாதது ஆகும்.

ஆண் மேலாதிக்கத்திற்கு எதிராகக் குரல் எழுப்புவதை விடுத்து, முழு ஆண்வர்க்கத்தையும் பகையாக மதித்து, அவர்களிடமிருந்து பிரிந்துநின்ற பெண் விடுதலை பற்றி வெறும் வாய்க்கூச்சல் போடும் மகளிர் அமைப்புக்கள், அல்லது குழுக்கள் பெண்களின் எந்தவித உரிமையையும் பெற்றதாகவோ அல்லது அதற்கான போராட்ட முன்னெடுப்புக்களைச் செயற்படுத்தியதாகவோ சரித்திரங்கள் கிடையாது.

தமிழீழத்தைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகளினால் முன்னெடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டம் புதிய புரட்சிகர சமூக அமைப்பைக்கட்டியெழுப்பும் மகத்தான பணியையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும், அதை நியாயப்படுத்துகின்ற பிற்போக்குத்தனமான பாரம்பரியகலாச்சாரப் பண்பாடுகளும் எமது தேசியவிடுதலையின் போதுதான் களையப்படும்.

ஒரு தேசிய இனம் அதே சமூக பொருளாதார அமைப்புடனும், அந்நிய அடக்கு முறையின் கீழ் அடிமையாயும் இருக்கின்ற போது அத் தேசிய இனத்தைச் சேர்ந்த பெண்கள் மாத்திரம் எப்படி விடுதலையாவது?

எனவே விடுதலைப் புலிகள் என்ற புரட்சிகர சக்தியின் போராட்டவடிவத்தை தழுவுவதே சகல அடக்குமுறைகளையும் வெற்றி கொண்ட புதிய சமூகத்தைப் படைப்பதற்கும் பெண் விடுதலையின் பரிமாணங்களை அறிந்து, அதனைப் பிரசவிப்பதற்கும் ஒரேவழி என்பதே உண்மை.

இந்த நிதர்சனமான பார்வையூடு உலகெங்கிலும் வாழுகின்ற ஈழத்தமிழ்ப் பெண்கள் போராட்டம், பங்களிப்புக்களில் தங்களை இணைத்துக்கொள்வது இன்றியமையாதது ஆகும்.

இந்த வகையில் பிரான்ஸ் வாழ் ஈழத்தமிழ்ப்பெண்களே! தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தினூடான பெண் விடுதலையை வென்றெடுக்க ஒன்றிணையுங்கள்.

நன்றி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கொட்டும்மழை
குமுறும் கடலலை
சுட்டெரிக்கும்
சூரியப்பார்வை
திக்குகள் திடுக்கிடும்
மின்னல் இடி முழக்கம்
மேகக் கதிர்வீச்சு
என்ன செய்யும்
எங்களை

எங்கள் வீழ்ச்சி
மரணமல்ல
விளைந்தபயிரின்
அறுவடை

அண்மையில் மரணம் எய்திய வீராங்கனை,
தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணித் தலைவி
மேஜர் சோதியா.

வெளியீடு :-

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
341, RUE DES PYRENEES,
75020 PARIS .

www.tamileelamarchive.com